தென்மொழி

அனைத்துத் தமிழர்க்கும் தலைவனாய் நின்றான்!

அவன்தான் தமிழின வீரன்!—அற்றை
நிலந்தரு திருவில் மாறன்!—கரிகாற்
சோழன்! இமய நெடுஞ் சேரன்! (அவன்தான்)

சிவன், திரு மால்—எனச் செப்பிடும் முதல்வன்!
சேண்நெடுந் தமிழினப் புதல்வன்!—கடும்பெருந்
தவம் செய்து தமிழ்த்தாய் பெற்றநல் மறவன்!
தரையெலாம் சென்றுவாழ் தமிழர்க்கு உறவன்! —(அவன்)

கதிர்க்கையன் எனும் பிரபாகரன் அவன்தான்!
காளையர் வழிபடு தலைவனும் அவன்தான்!
புதிர்க்கொரு புதிர்—அவன்! புரட்சியின் வடிவம்!
பூக்கின்ற விடுதலை விடியலின் படிவம்! (அவன்தான்)

நிலத்தினைக் குடைந்து—உள்ளே புகுந்து வாழ் வானோ?
நிலாவினில் சென்று—அவன் மறைந்து வாழ் வானோ?
புலத்தினை விடுவிக்கும் கோள், அவன் கோளே!
புறப்பகை வென்றிடும் தோள், அவன் தோளே!—(அவன்)

கார்த்திகை எனும் நளி மாதத்தில் பிறந்தான்!
காத்திடும் இனநலப் போரினில் சிறந்தான்!
ஆர்த்திடும் புலியெனக் களத்தினுட் சென்றான்!
அனைத்துத் தமிழர்க்கும் தலைவனாய் நின்றான்! —அவன்)

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

சுவடி : 26
ஓலை : 3

விலை:
உருபா : 3-00

நமக்கு வந்த மடல்கள்.

○ : 1465: பேரன்புப் பெருந்தகை மேதகு பாவலரேறு அய்யா அவர்கட்கு என் பணிவான வணக்கங்கள் பல; நலமே பொலிக!

நாம் வேலூரில் கூடிய நமது கூட்டத்தையே சட்டமன்ற இந்த நாடகக் கணிகை தேசத்'துரோகக்' கூட்டம் என்கிறார்கள். அதற்கு அவளுடைய முந்தானை முடிச்சுக்குள் மாட்டிக் கொண்டிருக்கும் ஆனந்தன், தண்டபாணி, சிங்காரம் போன்ற தமிழ்ப் பேடிகளும் பக்க மேளம் அடிக்கிறார்கள். நேற்றைய சட்டமன்றத்திலும் அதே பழமொழி?

இத் திங்களின் நமது தென்மொழிப் பாடலையும் (சு: 26; ஓ;2 அட்டை), ஆசிரியவுரையையும் கண்ணுற்றேன். அதே போன்று தமிழ்ச்சிட்டின் (கு:21; இ:7-இன்) பாட்டும்! அவற்றைக் கண்ட பிறகாவது இத் தமிழ்ப் பேடிகளுக்கு வீரம் பிறக்குமா? உண்மையை அறிவார்களா? என் செய்வது? எங்கெங்குக் காணினும் பேடிகள் கூட்டமே! —புலவர். தி. மு. அரசமாணிக்கம, ஈரோடு-11

○ : 1466: மதிப்பிற்கும் வணக்கத்திற்கும் உரிய ஐயா அவர்கட்கு—என் நெஞ்சம் நிறைந்த வணக்கம்: தமிழுக்கும் தமிழர்களுக்கும் தன்மான உணர்வு ஊட்டி வருகின்ற "தென்மொழி" சுவடி 26, ஓலை 2, என்னும் தீந்தமிழ் நல்லேட்டைக் கண்ணுற்று மகிழ்ந்தேன்! "தென்மொழி"யில் எல்லாமே திகட்டி விட்டது! அவ்வளவு தேன்சுவையைத் தெள்ளு தமிழில் தந்து வருகின்றீர்கள்! உங்கள் தொண்டு தொடரட்டும்; தூய தமிழும் வளரட்டும்; வாழ்க, வாழ்க, வளம் பெறவே என்று வாழ்த்துகின்றேன்!

இன்னணம் அன்புடன், —செ. ப. இளவாணன் வேலு,
கோலாலம்பூர் (மலேசியா)

○ : 1467: அறிவுசால் அய்யா அவர்களுக்கு வணக்கம் பல... தலைநகர்த் தமிழ்ச்சங்கம் சென்னையில் (8-9-91) நடத்திய—'தமிழர் பாதுகாப்பு மாநாட்டில்' தாங்கள் கலந்து கொண்டு கலைமணம் கமழும் அறிவொளிசேர் கருத்துரை யாற்றிப் பார்ப்பனீயக் கயவர்களின் சூழ்ச்சிச் செயலை மிகத் தெளிவாக விளக்கிய பாங்கு, பெரிதும் பாராட்டுக்குரியது! தங்களைப் 'பாவேந்தர்' வழித் தோன்றல் எனப் போற்றி வாழ்த்துகின்றேன்!

—பாவலர் இடிமுரசார். சென்னை-14

○ : 1468: பேரன்பின் தமிழ் நலஞ்சான்ற ஐயா, வணக்கம்! தங்களின் நலன் சிறக்கப் பெரிதும் விழைகிறேன்.

தாங்கள் தளைப்படுத்தப் பட்டதாகத் 'தினகரன்' நாளிதழ் வழி அறிந்து நெஞ்சு கொதித்துப் போனேன். ஈழ விடுதலை என்பது ஏதோ ஓர் இழிவான (கேவலமான) நடப்பு என்பதாக மாநில அரசும், நடுவண் அரசும் நடந்து கொள்வதைப் பார்த்தால் இவர்களுக்கு இன்னும் ஆயிரமாயிரம் அறப் பாடல்கள் (சாவப்) எழுதிக் குவித்தாலும் தீராது.

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றுவது என்பது தவிர வேறு வழியில்லை: 'விடுதலைப் புலிகள்,' 'ஈழவிடுதலை'—பேசி-

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை-முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன் நிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை நாம் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார். தொலைபேசி: (847829)

சுவடி: 26] தி பி. உ0உஉ —துலை-நளி (நவம் 91) [ஓலை:3)

இராசீவின் இறுதி! இட்டசாவம் முட்டியது-3

அப் பாடல், 'முண்டையின் மகனே! முண்டையின் மகனே!' என்று தொடங்கி,

சிங்களக் கொலைஞன்
செயவர்த்தனன் எனும்
வெங்கணன் விரித்த
வலையினில் விழுந்து
செந்தமிழ் இனத்தைச் சிரழித் திட்டுவ
முந்து 'இரா சீவ்'—எனும் முண்டையின் மகனே!
....
யாழ்த் தமிழ் மக்களின் யாக்கைகள் எல்லாம்
போழ்த்து, உயிர் குடிக்கும் அரக்கப் பூதனே!

—என்று நடந்து,

நீயும் நின் துணையும் நின்னிரு மக்களும்
ஏயு மிவ் வுலகத்து இருக்குநாள் தோறும்
எந்தமிழ் நல்லினத்து ஏற்றம் குலைதலால்,
வெந்து அழியும்நாள் விரைந்து உனக் கெய்துக!

—என்று பொங்கிப் புடைத் தெழுந்து,

இடும்பைப் பிறப்பே! ஏழிருக் கோடிக்
குடும்பம் அழிக்கும் கொடியனே! நின்னைக்
கடும்புலி வரியெனச் சாவு கவ்வுக!
'திடும்' என நினையொரு தீச் சுழல் சூழ்க!
சூழ்ச்சியும் அரக்கமும் அதிகாரச் சூழலும்
வீழ்ச்சி யுறுக! நின்னுடல் வெடித்துச்
சுக்குநூ றுகச் சிதறுக! சூதனே!
திக்கி நா விழுக்க! நெஞ்சு தெறிக்க!

எந்தமிழ் இளையரும் ஏழைப் பெண்டிரும்
நொந்துயர் துடிக்கையில் உளக்குலை நொய்ந்தே
இட்ட சாவங்கள் இணைந்து கூடி
முட்டுக நின்னுயிர்! மூளி,நீ யாகுக!

—என்று மின்னி, இடித்துச் சாவம் தந்து, உள்ளக்கனல் தணிகிறது. இப் பாடல் நடத்தியலும் நடுவில்,

தமிழினம் தகைக்கும் தருக்கனே! நின்குடி
அமிழுக! ஆங்கோர் அணுவின்றி அழிக!

—என்று, அழலும் நெஞ்சின் ஆர்ப்பு அடங்கிச் சுழலும் நினைவுடன் சூழ்ந்து நின்று,

தணலும் எம் நெஞ்சின் தவிப்பை
மணல், நீர், தீ,வளி, வானம்—ஆற் றுகவே!

—என்று சான்றியம் வைத்துக் கூறிய கூற்றன்றோ, இராசீவுக்கும் அவர் கொடுமைகளுக்கும் கூற்றுவனாய் நின்றது! இலங்கைத் தமிழினத்தவர் மனத்துயரும், எம் மனத்தவிப்பும் இட்ட சாவம் எவ்வாறு முட்டியது, பார்த்தீர்களா? உண்மையின் விளைவு அது தான்! 'அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றுவதும்' அது தான்!

இராசீவின் மறைவு உண்மையில் அவரின் வரலாறன்று! தென்மொழியின் வரலாறு ஆகும் என்க!

இப் பாடலில் வந்து விழுந்துள்ள சொற்களில் சில முன்னறிவிப்புகள் தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்தப் பெற்றிருப்பது வியப்பினும் வியப்பு. அக்குறிப்பு மொழிகளை ஆய்ந்து அறவுள்ளத்தின் வெளிப் பாட்டை ஊன்றிக் கவனித்து அறத்தின் உறுதியைக் கண்டு உணருங்கள்!

'வெந்து அழியும்'—நின் உடல்' என்பது, அவர் குண்டு வெளிப்படுத்திய தணலால் வெந்து மடிவர் என்பதையும்,

'நின்னைக் கடும்புலி வரி எனச் சாவு கவ்வுக' என்னும், தொடர், அவரை புலிப் படையைச் சார்ந்த ஒரு புலி வந்து சாவச் செய்தது என்பதையும்,

'திடும்'என நினையொரு தீச்சுழல் சூழ்க 'என்னும் தொடரில், 'திடீரென' என வாராது, 'திடும்' என வந்தது, அவரை

அணுகி வெடித்த குண்டின் வெடியொலியாகிய 'டும்' எனும் குறிப்பொலி குறிப்பிடப் பெற்றிருப்பதையும், அவர் அவ்வாறு குண்டு வெடித்துப் பற்றி யெரிகையில், அந் நெருப்புச் சுழல்—பதினன்கடி உயரம் எரிந்ததை அனைவரும் தொலைவிருந்து கண்டதையும், அவர் மறைவால் அவர் மேற் கொண்ட அரசியல் சூழ்ச்சியும், தமிழரை அழிக்கும் அரக்கத் தன்மையும் (அரக்குதல்—அழித்தல்) அதிகாரச் சூழலும், வீழ்ச்சியுற்றதையும் இப் பாடல் முன்னறிவிப்பாக, முன் எச்சரிக்கையாக, நுவன்றதை உணர்ந்து கொள்க!

மேலும் இது வரை சாவப் பாடல் பாடிய, அஃதாவது அறம் பாடிய புலவர் சிலர் பாடல்களில் உள்ள கருத்துகள், பொதுவில் வெளிப்பட்டவையே! 'சாவுக', 'மறைந்தொழிக' எனும் பொதுவாக இறக்கின்ற—மறைந்தொழிகின்ற கூற்றுகளையே அவை கொண்டிருந்தன. ஆனால், இவ் வறப் பாடலில் அவர் எவ்வெவ்வாறு சாவ—செத்து ஒழிய வேண்டுமென்று கூறப் பெற்றதோ, அவ்வவ்வாறே அவர் செத்தொழிந்ததுதான் வியப் பினும் வியப்பு! அறத்தின் அனைத்து உணர்வுக் கூறுகளையும் புலப் படுத்தி நிற்பது!

அஃதாவது, அவர் திடுமென நோயினலோ, ஒரு நேர்ச்சியி-ஞலோ இறவாமல் "அவரது உடலை ஒரு கடும்புலி கவ்வியது போலச் சாவு கவ்வ வேண்டும்; 'தி...டும்' என ஒரு தீச் சுழல் சூழ்ந்து எரியுண்ண வேண்டும்; உடல் வெடித்துச் சுக்கு நூறாகச் சிதற வேண்டும்; அச் சூது நிறைந்த—பேசிய—நாக்கு—திக்கித் திணறி உள்ளே இழுத்துக்கொள்ளப் பட வேண்டும்; அவர் பொய் நெஞ்சம்—நெஞ்சாங்குலை—வெடித்துத் தெறித்து விழ வேண்டும்" என்று பாடலில் அறம் பொங்கி யெழுந்து காலத் திற்குக் கட்டளை யிடுகிறது.

இனி, அறவாசிரியன் இடுகின்ற சாவம் மட்டுமே இங்கு ஏவப் பெறவில்லை; அவ் விராசீவ் என்னும் கொடியரால் அழிக்கப் பெற்ற ஆயிரக் கணக்கான இளைஞரும், ஒன்று மறியா, இரங்கத் தக்க பெண்டிரும், அவர் ஏவியப் படைகளால் அழிக்க—உயிரோடு சிதைக்கப் பெறுகையில், அவர் தம் உயிர்கள் துடித்து, உள்ளம் உலவும் நெஞ்சாங்குலைகள் நொய்ந்து, நைந்து இட்டு வைத்த சாவங்கள் அனைத்தும் ஒன்றாக இணைந்து, வலுப்பெற்றுக் கூடி, செயல் வடிவம் பெற்று, அவர் உயிரை வந்து முட்டட்டும்; அவ்வாறு முட்டலினலே அவர் உடலின், முழு வடிவம் சிதைந்து, முளியாகி விடட்டும்—என்று இவ் வறப்பாடல் நுவல்கிறதையும், அவ்வாறே நடந்துற்றதையும் அனைவரும் கண்டு இறும்பூது எய்துக!

இனி, இச் சாவப் பாடல் வெளிப்படுத்தப் பெற்ற பின், இதில் கூறப் பெற்ற நிகழ்வுகள் கட்டாயம் நிகழ்த்தப் பெறல் வேண்டும் என்று நிலம், நீர், தீ, வளி, வானம் ஆகிய ஐம்பூதங் களுக்கும், இவற்றைச் செயல்படுத்த வேண்டும் என்ற கட்டளை வேறு இப் பாவின் இறுதி அடிகளில் கூறப் பெற்றுள்ளன.

அஃதாவது, தமிழினத்தைச் சீரழிக்கும் இச் செருக்குப் பிடித்த ஆட்சியாளரின் மறைவால் அவரின் குடி உயர்வின்றித் தாழ்ந்து, அமிழ்ந்து போக வேண்டும் என்றும், அக்குடி இவர் செய்த கொடுமைகளால் ஓர் அணுவின்றிப் படிப்படியாக அழிந்து போக வேண்டும் என்றும் கூறி, இவ்வாறு, தணந்து—கனன்று கொதிப்புற்றிருக்கும் இவ் வறவாசிரியனின் நெஞ்சத்தின் தவிப்பை,ஆற்ருமையால் வெளிப்போந்த இச்சாவக் கட்டளையை அவ் வைம் பூதங்களும் செயல் படுத்துக என்றும் முடிவு கூறி இப் பாடல் நிறைவுகிறது.

அப் பாடலில் கூறப் பெற்றது போலவே, இராசீவினது உடலை, மண் அணைத்துக் கொண்டது; தீ பற்றிக் கொண்டது; அவர் சாம்பலை நீர் உள் வாங்கிக் கொண்டது; அதை இமயமலைச் சாரலில் தூவியபொழுது,அவ்வுடல் அணுக்களைக் காற்று தன்னுடன் கரைத்துக் கொண்டது; வானம் அவரின் ஆவியைச் சுவரிக் கொண்டது!

இவ் வகையில் இவ்வறவாசிரியன், இராசீவால் அழிக்கப் பெற்ற ஆயிரக்கணக்கான தமிழ் உயிர்களுடன் இணைந்து கூடி இட்ட சாவம் வந்து அவரை முட்டிக் கீழே தள்ளியது எனக!

இப்பாடல் இன்று நேற்றின்றி, மூன்ருண்டுகளுக்கு முன்னர் ஏப்பிரல் 88-இல் எழுதி வெளியிடப் பெற்றது. பொதுவாகவே அறப் பாடல்கள் மூன்று நாள்களில் அது தவறின் மூன்று மாதங்களில் அதுவும் தவறின் மூன்று ஆண்டுகளில் செயலுக்கு வரும் தன்மையுடையன. ஆய்வாளர்கள் இவ்வற வாசிரியரின் முந்தைய அறப் பாடல்களை நோக்கி அவ்வுண்மையைத் தெளிந்து கொள்க. அது போலவே இப் பாடலும் மூன்று ஆண்டுகளில், அஃதாவது மே 91-இல் செயலுக்கு வந்து, அச் சாவம் நன்கு நிறைவேறி இதன் ஆசிரியனுக்கும் மன நிறைவைத் தந்தது. தமிழின மக்களுக்கும் ஓர் ஆறுதலைத் தந்தது.

இவ்வாறின்றி, இப் பாடல், இராசீவின் மறைவிற்கு இரண்டொரு மாதங்களுக்கோ, இரண்டொரு கிழமைகளுக்கோ முன் எழுதப் பெற்று வெளிவந்திருக்குமாஞல், அதன் எதிர் விளைவுகளே வேறு வகையாக உருவாகியிருக்கும். இவர்தாம் இந்தச் செயலைத் திட்டமிட்டு, அந்தத் தமிழ் வீரப் பெண் தனுவிடம் கூறிச் செயல்படுத்தியிருக்கிருர்; அல்லது எழுதிய பின்னர்தாம், பிறர்க்கு இராசீவை இவ்வாறு கொல்ல வேண்டும் என்ற எண்ணமே தோன்றித் திட்டமிட்டிருக்க வேண்டும் என்று கூறி நம் மேல் கடுமையான குற்றம் சாட்டிக் கொடுமையான தண்டனையைத் தந்திருப்பார்கள்.

இனி, இராசீவின் மறைவிற்குப் பின் தில்லியிலும் தமிழ் நாட்டிலும் நிகழ்ந்த, நிகழுகின்ற செய்திகளைப் பற்றிச் சிறிது பேசுவோம்.

இராசீவ் மறைவைப் பற்றித் தில்லியிலுள்ள பேராயக் கட்சித் தலைவர்களுள்ளும், தமிழகத்திலுள்ள பேராயக் கட்சித் தலைவர்-

Scanned with CamScanner

களுள்ளும் உண்மையிலேயே வருத்தப்பட்டவர் ஒரு சிலரே! மற்றவர்களெல்லாரும் அவரால் பெற்ற பணம், பதவிகள் இனி கிடைப்பதற்கு வாய்ப்பில்லையே என்ற நிலையிலும், சிலர் அவர் தொலைந்ததே நல்லது என்ற நிலையிலுமே நினைத்து வருத்தமும், மகிழ்வும் கொண்டார்கள் என்றே கருதுதல் வேண்டும்.

இராசீவின் சாவை ஏதோ ஒரு மேன்மகன் மறைவாகவே விளம்பரப்படுத்திக் கலகலத்துப் போயிருக்கும் தங்கள் கட்சியைக் கட்டுவிக்கவே பயன்படுத்திக் கொண்டனர். சேரியில் வாழும் முதிய, இளைய ஏழைப் பெண்களையும், சில முதியவர்களையும் அழைத்து, அவர்களுக்கு உணவும், பணமும் கொடுத்து, ஏதோ தங்களுக்கெல்லாம் படியளந்த ஆண்டவன் ஒருவன் மறைந்தது போல், அவர்கள் மாரிலும், முகத்திலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழவைத்து, அக் காட்சிகளைப் படம் பிடித்துத் தொலைக் காட்சிகளிலும், திரையிலும் காட்டி, அவரைத் தெய்வ நிலைக்கு உயர்த்திப் பார்ப்பன அதிகாரிகளும், அமைச்சர்களும், அவர்களின் அடிவருடிகளும் ஒரு மாயையே மக்களிடம் உருவாக்கிக் கொண்டனர்.

இனி, அவர் மறைவை மக்கள் இரக்கம் கொள்ளும் அளவிற்கும், எதிர்க்கட்சிகளின் மேல் வெறுப்புக் கொள்ளுமாறும் சூழ்ச்சியாகப் பயன்படுத்திக் கொண்டனர். தமிழக மக்கள் தி.மு.க. மேல் முழு வெறுப்புக் கொள்ளுமாறு, அவர் மறைவை மிகைப் படுத்தியும், தமிழீழ விடுதலைப் புலிகள் மேல் ஓர் அச்சமும், வெறுப்பும் கொள்ளுமாறு கதைகள் பல கட்டியும், அதிகாரிகளை விட்டுத் தமிழீழ ஏதிலிகளையும், அவர்களுக்கு ஆதரவு தந்தோர்களையும், தருவோர்களையும் தேடிப் பிடித்து, ஏதோ அவர்களால்தாம் இராசீவ் இறந்தது போலப் பழி சுமத்தியும், அச்சுறுத்தியும், கொடுமைகள் பல செய்து துன்புறுத்தியும், தளைப்படுத்தியும் தங்கள் தேர்தல் வெற்றிக்காகப் பல உத்திகளைப் பயன்படுத்தி வெற்றிகளையும் பறித்துக் கொண்டனர்.

ஏற்ற இறக்கமாக இருந்த தில்லிப் பாராளுமன்றத்தையும் பேராயம் தக்க வைத்துக் கொண்டது. தமிழகத்திலோ, பச்சைப் பார்ப்பனீயத் தலைமையில் அதற்குக் கட்டியங் கூறிய வீடணப் பிரகலாதன்கள் துணையுடன், இந்து மதத்திற்கும், பார்ப்பனர்களுக்கும் முழு நலந் தேடுகின்றபடி ஓர் அழுத்தமான ஆட்சி அமைந்தது. கால மாற்றங்களை முன் கூட்டியே உணரவும், காற்றடித்த பொழுதே தமிழ்க் கென்றும் தமிழர்க் கென்றும் ஓர் எள்ளின் மூக்கத் துணை நலமும் தேடவும் இயலாத கலைஞர் கருணாநிதி ஆட்சிக் கட்டிலிலிருந்து அப்புறப் படுத்தப் பெற்றார்.

ஆரியப் பார்ப்பனீயம் தமிழகத்தில் அமைத்த ஆட்சி, கடந்த ஐம்பதாண்டுக்காலத் தமிழர்களின் உள்ளுணர்வையும், முன்னேற்ற வளர்ச்சிகளையும் கிள்ளியெறிந்தும், வெட்டித் தகர்த்தும் புலவகைக் கரவான கொடுமைகளைச் செய்ய முற்பட்டு விட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் வளர்ச்சியும் விடுதலை உணர்ச்சியும் முயற்சியும் இந்தியாவிலும், குறிப்பாகத் தமிழகத்திலும் உள்ள

அனைத்துப் பார்ப்பனர்களின் உள்ளத்தில் உறுத்தல்களாகவே இருந்து வந்தன. அவற்றைச் சீர் குலைப்பதற்கு இராசீவ் என்னும் காசுமீரப் பார்ப்பனரைப் பயன்படுத்திக் கொண்டு வந்தது பார்ப்பனீயம். அதன் செயற்பாடுகளில் ஒன்றுதான் இராசீவ் இலங்கைக்கு அனுப்பிய அமைதிப் படை. அதற்கும் தடை வந்தவுடன் இராசீவை ஆட்சியில் மீண்டும் ஏற்றிவைக்க உறுதி பூண்டிருந்தது பார்ப்பனீயம். இடிமேல் இடி விழுந்தது போல் இராசீவ் மறைவு நேரவும், அதையே சாக்காக வைத்துக் கொண்டு தமிழகத்தில் ஆட்சி அமைத்த செயலலிதா என்னும் பார்ப்பனீயப் பச்சைப் பூம்பு, விடுதலைப் புலிகளை விரட்டோ விரட்டென்று தமிழகத்தை விட்டே விரட்டி வருகிறார். தமிழர்களுக்கு இங்கு மட்டுமன்று, இவ்வுலக உருண்டையில் எங்குமே உரிமை பெற்ற ஒரு நாடுகிடைத்து விடக் கூடாதென்னும் எண்ணத்தில் விடுதலைப் புலிகளின் மேல் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன. அவற்றுக்கு நடுவண் அரசும் துணையாகவும் தூண்டுகோலாகவும்நின்று வருகிறது.

இக்கால கட்டத் தமிழக அரசியல் பெரும் இக்கட்டானது. பார்ப்பனீயத்தை விடப் பார்ப்பனீயத்திற்குத் துணைபோகும் இரண்டகர்களும் காட்டிக் கொடுப்பான்களும் தங்களுக்கு நலம் சேர்த்துக் கொள்ள இக் கால கட்டத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ள முனைந்து நிற்கின்றனர். அதன் வெளிப்பாடான விளைவுகளே நெடுஞ்செழியன், சோமசுந்தரக் கிருட்டிணசாமி, அரங்கநாயகக் கூட்டங்கள். ஆளுக்கு ஆள் மிடா விழுங்கிகள்! கடப்பாரையையே கரைத்துக் குடித்து ஏப்பம் விடுகின்ற ஊழல் பெயர்வழிகள்! இவர்களின் ஒட்டு மொத்தக் கூட்டுத் துணையால், முதல்வர் செயலலிதா திரைப்படத்தில் ஆடியதற்கு மேல் அரசியல் அரங்கில் தையா தக்கா என்று குதியாட்டம் போடத் தொடங்கி விட்டார்.

இந்த இழிபாடுகளையும் இடிபாடுகளையும் எவ்வாறு எதிர்கொள்வது? ஏற்கனவே தமிழினம் சாதி முள் வேலிகளாலும், மத மதில்களாலும், பல்லாயிரம் பிரிவுகளாகப் பிரிந்து கிடக்கின்றது. இந்த நிலையில் அரசியல் கட்சிகள் வேறு அவர் தம் நோக்கங்களையும் கொள்கைகளையும் செதில் செதில்களாகப் பிரித்தெடுக்கின்றன. திரைப்படக் கயவர்கள் வேறு மக்களின் ஒருமுகச் சிந்தனைகளை வளரவிடாமல் தடுத்துக் கொண்டு சதிராட்டம் போட்டு வருகின்றனர். இவ் விருண்டு வரும் சூழ் நிலையிலும், மக்களெல்லாம் அரண்டுக் கிடக்கும் அரசியல் கொலை வெறிப் பதற்றங்களுக்கிடையிலும் தமிழக மக்களை மீட்டெடுப்பது எப்படி என்று உண்மையான ஆறல் வலுக்குன்றிய சிறு சிறு இயக்கத் தலைவர்களெல்லாரும், சிந்தித்துத் தம்முள் ஒன்று படும் திரணின்றிக் கண்ணும் விழிகள் பிதுங்கிக் கிடக்கின்றனர். அறிஞர்களெல்லாரும் ஆளுக்கொரு கொள்கை வழியைப் பற்றிக் கொண்டு, தங்களின் இணைபாதையை மேலும் மேலும் அகலமாக்கிக் கொண்டு, சோர்ந்து கிடக்கும் தமிழர்களிடையே தங்கள் தங்கள் அறிவு

விளைச்சலுக்கு ஆக்கந் தேடிக் கொள்கின்றவர்களாக மாறி வருகின்றனர். திங்கள் விளைவு மூட்டைகளுக்கு ஏற்ற விற்பனைச் சந்தைகளை அமைத்து வருகின்றனர். தமிழகமே இருண்ட புதர்க் காடாவும், மருண்ட சுடுகாடாகவும் மாறி வருகின்றது.

இவற்றுக் கிடையில் பேராயக் கட்சியை அடுத்த தலைமுறை வரையிலேனும் நகர்த்திச் செல்லத் தக்க தலைமையில்லாமல் அஃது அல்லற் படுவதைச் சரிகட்ட, இராசீவின் மனைவி சோனியாவை-யேனும் இந்தியத் தலைமை தாங்கச் செய்ய அரும் பெறல் முயற்சி-களைச் செய்து, மனஞ்சலித்த பின்னர், வடவிந்தியத் தலைவர்களும், தென்னிந்தியத் தலைவர்களும் கைகளைப் பிசைந்தும் கண்களைக் கசக்கியும் போலி நாடகங்களை மக்கள்முன் ஆடிக் காட்டுகின்றனர்.

எப்படியோ, இந்திய அரசியல் தலைமை வாயாமல், இந்து மதத் தலைவர்களுள் ஒரு பெரும் பார்ப்பனீய வெறியரைத் தேர்ந்தெடுத்து, அனைத்திந்தியத் தலைமைக்கு அத்வானி போன்றவர்களை முன்னுக்குக் கொண்டுவரப் பார்ப்பனர்கள் மிகு துடிப்புடன் இயங்குகின்றனர்.

இவ் வதிர்வு நிலைகளுக்கிடையில் எந்தமிழ் இனம் அடுத்த தலைமுறைக்கு ஏற்ற ஒரு பெருந் தலைமைக்கு ஆள் பார்த்து ஏங்-கிக் கிடக்கின்றது. சென்ற தலைமுறையில், தமிழர்களின் நம்-பிக்கை விண்மீன்களாகக் காட்சியளித்த தமிழினத் தலைவராம்(!) கலைஞர் தம் தோள்கள் சாம்பியும், மனம் கூம்பியும், அடுத்த அடி எங்கு வைப்பது, எதில் வைப்பது என்று அல்லற்பட்டு ஆற்றாமல் கிடந்து வருகிறார்.

திராவிடக் கூட்டத்தைக் கட்டமைத்த தந்தை பெரியார், பிறங்கடையிரான திராவிடர் கழகத் தளபதி(!) கி. வீரமணியோ, தம்மிடம் குவிந்துள்ள காசுகளைக் காப்பாற்றிக் கொள்ள-வேண்டித் திருட்டு விழி விழித்துப் பார்ப்பன முதல்வர் செய-லலிதாவின் ஆயிரம் இயங்கிகள் புடை சூழவரும் வழிநடைச் செலவுகளுக்கு வெற்றிப் பதாகைகளும், பட்டுக் கம்பளமும் விரித்துப் புகழ்ப் பராவுதல் செய்து வருகிறார்.

இனி, எஞ்சியுள்ள தமிழர் இயக்கங்களின் தலைவர்கள் ஒரு சிலரும் தனித் தனியான முழக்கங்களை அவ்வப் பொழுது எழுப்புவதும், பின்னர் அடுத்தடுத்து வரும் அரசியல் வாய்ப்புகளுக்கு நாள் பார்த்துக் கிடப்பதுமான அவலங்களிலேயே மூழ்கி எஞ்சி-யுள்ள காலங்களை மெல்ல மெல்லக் கடந்து வருகின்றனர். அவர்-களுள் பாட்டாளி மக்கள் கட்சி அமைப்பாளர் திரு. இராமதாசு அவர்களும், திரு. பழ. நெடுமாறன் அவர்களும், திரு. நகைமுகன் அவர்களும் நம் நம்பிக்கைக்கு உரியவர்களாகப் படுகின்றனர். இனி, தம்பி பிரபாகரனே ஒரு தனிப் போராளியாகவே இறுதி-வரை நின்று பொருதிச் சாவது என்ற விடுதலை வேட்கையுடன் பல்வேறு இடையூறுகளுக்கிடையிலும் தோள் தாழாது போராடி வருகின்றார்!

(தொடரும்)

Scanned with CamScanner

1. நூல்: தமிழர்தம் தலைமை வழிபாடு.

ஆசிரியர்: முனைவர் .க.ப.அறவாணன்
தமிழியல் துறைத் தலைவர்.
புதுவைப் பல்கலைக் கழகம், புதுச்சேரி-14.

பக்கம்: 124. விலை: உருபா 25.

கிடைக்குமிடம்: பாரி நிலையம், 184-பிரகாசம் சாலை.
சென்னை-108.

தமிழர்களிடையே இக் காலத்து வளர்ந்து வரும் தலைமை வழிபாடு பற்றிய விளக்கமான கருத்தாய்வு நூல் இது.

தலைமையை வழிபட்டதன் படிநிலை (பரிணாம) வளர்ச்சிதான் கடவுள் வழிபாடாக மாறியது. பின்னர் அதுதான் மதமாகவும் வடிவம் பெற்றது. தலைமை வழிபாடு, மதமாக, அரசாக, ஆட்சியாக, அறிவாக, கலையாக, பண்பாடாக, நாகரீகமாகப் படிப்படியாக, கிளை பல படர்ந்து வளர வளர, அதன் போலித்தனங்களும், பொய்த் தோற்றங்களும் மிகுந்து கொண்டே வந்தன. தமிழர்களிடத்தில் மட்டுமே இந்த மாறுதல் ஏற்படவில்லை. உலக மாந்தக் கூறுகள் அனைத்திலும் இவ் வியற்கையின் தாக்க நிலைகள் பற்றிப் படர்ந்து வளரவே செய்தன. இயங்கியல் நிலையில் இஃது உண்மையானது; தவிர்க்கவே முடியாதது. இவ் வுலகத்தை நாம் படைக்கவில்லை. உலகமே நம்மைப் படைத்தது. இதன் அடுத்த உண்மை என்ன தெரியுமா? உலகமும் நாமும் சேர்ந்தே உலகத்தையும் நம்மையும் படைத்துக் கொண்டோம். அவ்வாறானால் உலகம் என்பது யாது? அது மண்ணும் கல்லும், நீரும் நெருப்பும் காற்றும் வானும் கலந்த வெறும் உருண்டையன்று! நாமும் வெறும் உயிரன்று; உடலும் அன்று! இவ்வுலகத்திற்குள் தான் நாமும், நமக்குள் தான் உலகமும், மேலும் மேலும் படிநிலை வளர்ச்சி, கூர்தலற முயற்சி பெறுதல் வேண்டும்! இதன் முடிவு? ஆனால் அதுபற்றியல்லாம் நாம் இப்பொழுது சிந்திக்கத் தேவையில்லை. நாம் இப்பொழுது சிந்திக்க வேண்டுவதெல்லாம் நாம் என்னென்ன மாறுதல்களை—மேல் திருத்தங்களை—வடிவ நிலையிலும், வாழ்க்கை நிலையிலும், மன நிலையிலும்—ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே! இவ்வகைச் சிந்தனை வெளிப்பாடுகளுக்கு உதவும் ஒரு சிறு கூறே—முயற்சியே—இந்நூலாகும்.

ஆனால், பேரா. க.ப.அறவாணனாரின் இத் 'தமிழர் தம் தலைமை வழிபாடு' என்னும் இந்நூல் இந்த வகையில் எவ்வளவு

வெற்றி பெற்றுள்ளது என்பதை நாம் சிந்திப்பது நல்லது. கோள வியல், உயிரியல், உயிர் மாந்தவியல், மக்களியல், குமுகவியல், அரசியல், கலை நாகரிகவியல்— போலும் அனைத்துக் கூறுகளையும், தொட்டுச் செல்வது இந்நூல்.

பேரா. க.ப.அறவாணனாரிடம் பொதுவாகவே ஒரு குறை-யுண்டு. அது மனவியல் சார்ந்தது.

தமிழர் மேல் வைத்த அளப்பரும் அன்பினாலும், அவர்களி டம் உள்ள குறைகளை யெல்லாம் விரைந்து போக்கி, அவர்களை உலக வேற்று இன முன்னேறிய மக்களுடன் ஒப்ப வளர்த்து, மேலேற்றி விட வேண்டும் என்னும் வேக எண்ணத்தாலும், உறுதிப் பாட்டாலும், அளவுக்கு மீறிய ஆர்வத்தாலும், அவர் மனக்குறை அறியாததாகி விடுகிறது.

இதனால், அவர், உலகின் மக்கள் இனங்கள், அல்லது மக்கள் கூட்டங்கள் அனைத்திடமும் உள்ள பொதுவான, ஆனால் குறைவு நிறைவான, இனவியல், மனவியல், மாந்தவியல், பண்பியல் குறைபாடுகளை எல்லாம் ஒரே அளவெடையில், தமிழரிடம் மட்டி லுமே நிறைந்திருப்பதாகவும், அல்லது பொருந்தியிருப்பதாகவும் நினைத்து, அவற்றை அவர்களின் அறிவுக்குப் புலப்படுமாறு எடுத்துக் காட்டி நீக்கிவிட வேண்டும் என்னும் மிகு துடிப்புடன் எழுதுகிறார்; செயல்படுகிறார்.

அவரின் இப் பிழையுணர்வு மதிப்பீடு, இவரின் மாந்தவியல்— தமிழின உணர்வு நூல்கள் அனைத்திலுமே பொதுவாகவும், பரவ லாகவும்,ஒரு சார்பினதாகவும் காணப் பெறுகின்றது.எனவே,இந் நிலை, இவர் தமிழரிடத்தில் ஏற்படுத்த விரும்பும் ஆக்க விளைவிற்கு மறுதலையாகவும், தமிழர்தம் எதிரியினத்தின் ஊக்கவுணர்விற்கு உறுதுணையாகவுமே பயன் கொள்ளுவிக் கொண்டிருப்பதை அவரும் அவர் போலியரும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

தமிழினம் கடந்த மூவாயிர மாண்டுகளாக வேற்றினத்தவர்-களால், அரசியலாலும்,இனவியலாலும்,மொழியியலாலும், கலை, பண்பாட்டியலாலும், அடிமைப் படுத்தப்பட்ட, அறியாமைப் படுத்தப்பட்ட, அழுத்தப்பட்ட ஓர் இனம் என்னும் பருப் பொரு-ளான வரலாற்று உண்மையை ஏனோ அவர் முன்னேற்ற வசதிக் காக மறந்து விடுகிறார். இனி, அவ்வாறில்லாதபடி, சிற்சில நூல்-களில், சிற்சில இடங்களில் இவ் வுண்மையை தலை கால் மாற்றிப் போட்ட வடிவமாகவும் வெளிப்படுத்தி வருகிறார். இந் நிலையே இவர்மேல், எதிரிகளும் நம்பிக்கை வைக்கும்படி இவர்க்கு ஆதர வாக நின்றிருக்கின்றது; நிற்கின்றது. இவ் வகையில் இவரின் தனி நலமும் அவர்களால் மறைமுகமாகப் பேணப்படுவதையும் நாம் உணராமல் இல்லை. இந் நிலையும் தமிழினத்திற்குத் தமிழறிஞர்-களால் ஏற்பட்ட ஒரு வீழ்ச்சியும் ஆகும். இதனை அவரால் விளங் கிக் கொள்ள முடிகிறதோ, முடியவில்லையோ, நமக்குத் தெரிய வில்லை; அதைத் தெரிந்து கொள்ள நாம் விரும்பவும் இல்லை.ஏனெ னில் அவர் தமிழுக்கும் தமிழர்க்குமாக ஏதோ ஒரு களத்தில்

நின்று கொண்டு உண்மையாகச் சிந்திப்பவர். அது சீரிய சிந்தனை-யும் கூட; அதன் வெளிப்பாடுகளில்தாம் சில நலிவுகளும் நசுங்கல்களும் மெலிவுகளும் மேலோட்டங்களும் உண்டு! உலகியல்—மாந்த நடைமுறைகளை எண்ணி அவற்றைப் புறங்காத்து விடுவோம்;

இனி, 'தமிழர்தம் தலைமை வழிபாடு' என்னும் இந்த நூலில், தமிழர்களுக்குள் இருப்பதாகச் சுட்டப் பெறும் தலைமை வழிப்பாட்டுணர்வின் படிநிலை வளர்ச்சி, உலகில் உள்ள அனைத்து இனங்களிலுமே படிந்துள்ள ஒருவகை மனவியல் கோளாறே ஆகும். இக் கோளாறு பல ஐரோப்பிய நாடுகள், ஆப்பிரிக்க நாடுகள், அரபு நாடுகள், அமெரிக்க மாநிலங்கள், சீனம், உருசிய நாடுகள், சிங்கை, மலேசிய நாடுகள், சப்பான்! பர்மிய, சயாம், பிலிப்பைன்சு, ஆத்திரேலியா, இலங்கை நாடுகள் முதலியவற்று-ளெல்லாம் உள்ளதுதான்! இன்னும் இந்தியாவை எடுத்துக் கொண்டால், ஆந்திரம், கருநாடகம், மராட்டியம், மேற்கு வங்காளம், உத்திர, மத்தியப் பைதரங்கள், அசாம், காசுமீரம், போன்ற மாநிலங்கள், பாக்கித்தான் முதலிய நாடுகளிலும் இருக்கத்தான் செய்கின்றன. இவ்வாறு இருப்பினும், இ'து ஏதோ, தமிழர்-களிடை மட்டுமே இருப்பதாக ஆசிரியர் மிகைப்படப் பொருத்திக் கூறுவது, இவர் தமிழினத்தின் மேலும், அது திருந்த வேண்டும் எனும் அளப்பரும் அக்கறையின் மேலும் கொண்ட உள்ளுணர்வின் வெளிப்பாடாகவே கொள்ளலாம்;

நன்குகப் படிக்கும் திறனும், பிற அனைத்து மரபு நிலை, குடும் பச்சூழல், பிற அரசியல், இனவியல், மேலாண்மை வாய்ப்புகளும் பெற்ற உயர்குடியில் உள்ள ஒரு மாணவனைப் பார்த்து, அவனொடு கல்வியில் குறைவுற்ற தன் மகனை ஒப்பிட்டு, பலவாறு அவன் அறியாமையைச் சுட்டி ஏசவும் பேசவும் சலித்துக் கொள்ள-வும் செய்கின்ற, தன் மகன் மேல் அளவற்ற அன்பும், அவன் முன்னேற்றத்தில் அசையாத உறுதிப்பாடான நம்பிக்கையும் கொண்ட, பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த தந்தை ஒருவர் கொண்ட உணர்வு போலாகும், இந் நூலாசிரியர் தமிழினத்தின் மேல் குற்றப் படுத்தும் இந்த உணர்வு, என்க;

ஆனல், வழி வழியாகக் கல்வி கற்கும் வாய்ப்பை இழந்து விட்ட, அடிமைப் படுத்தப் பட்ட, அறியாமைப் படுத்தப் பட்ட, அடக்கி ஒடுக்கப்பட்ட ஒரு மரபு வழிக் குடும்பத்தில் தோன்றிய-வன்தான், அக் கல்வியறிவு மேல் அக்கறையும் ஆர்வமும் கொள்-ளாத பையன் என்பதை ஏனே, அவன் தந்தை போலும் இவரும் மறந்து விடுகிறார்;

அவ்வாறு காணும் பொழுது, இவர் சுட்டிக் காட்டும் தமிழினத்தின் வாழ்வியல் பிழைகள் அல்லது குறைகள் அவர்களின் குறைபட்ட மனவியலில் மட்டுமோ, அல்லது கறைபட்ட வாழ்-வியலில் மட்டுமோ இருந்து தோன்றி ஆழ வேரூன்றி விடவில்லை என்பதையும், அவர்களின் அழுத்தப்பட்ட அல்லது அடியறுக்கப்

பட்ட அரசியல், பொருளியல், இனவியல், பண்பாட்டு நாகரிகவியல் முதலிய அனைத்துத் தாக்கங்களிலிருந்துமே உருவாகியவை என்பதை இவர் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இவர் இவ்வாறு உணர்ந்து கொள்ளாத தன்மை, இவர் ஒரு தமிழ்ப் பேராசிரியராகவும் வெறும் பொது மாந்தவியல் ஆய்வாளராக-வும் மட்டுமே தம் ஆய்வுப் பார்வையைச் செலுத்திக் கொண்டிருப்பதால் விளைந்தது ஆகும். இவர் ஓர் இனவியல் பார்வையாளராகவும், வரலாற்றியல் பார்வையாளராகவும், வல்லாண்மை இனங்களின் தாக்கங்களை ஆய்பவராகவும் மாற்ற மடைந்திடல் வேண்டும் என்பது நம் வேண்டுகோளாகும். (இவர் இதற்கு முன்னர் எழுதிய 'தமிழர் மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்பு-கள்', 'தமிழர் தம் மறுபக்கம்' என்ற நூல்களில், தமிழினத்தின் மேல் நடந்த பிற இனத் தாக்கங்கள் ஓரளவு சுட்டப் பெறுகின்-றன என்னினும், அவையும் ஏறத்தாழ இதே அணுகுமுறையில் தான் காட்டப் பெற்றுள்ளன வென்பதையும் மீண்டும் இங்கு நினைவு கூர்தல் பயனுடையதாகும்.)

இனி, முடிவாகக் கூறுமிடத்து, 'தமிழர் தம் தலைமை வழிபாடு' என்னும் இந் நூலின் தலைப்பு, தலைமை வழிபாடு என்னும் அளவில் மட்டும் குறுகி நின்றிருப்பின், இந் நூலில் கூறப் பெறும் செய்திகள் பொதுப் பொருளுடையனவாகக் கருதப் பெற்று, மாந்தவினத்திற்கே உள்ள பொதுக் குறைபாட்டை நன்கு எடுத்துக் காட்டுவனவாகவும் ஏற்கப் பெற்று, மாந்தவியல் வர-லாற்றறிஞர்களிடையே இந்நூல் மிகு நன் மதிப்பைப் பெவதாக-வும் அமைந்திருக்கும் என்பதே நம் பொதுவான கருத்தாகும்.

2. நூல்: **இன்றைய குலுக்கல்கள்** (பாத் தொகுப்பு)

தொகுப்பாசிரியர்கள்: ஓடவை: தமிழ்வேந்தன்
கல்லை: அருட்செல்வன்

பக்கம்: 16 + 120 விலை: உரு. 12.50

வெளியீடு: தென்னர் பதிப்பகம்,
திருவள்ளுவர் சாலை, ஒட்டன் சத்திரம்.

பன்னிரண்டு பாவலர்கள் பலவேறு தலைப்புகளில் பாடிய பாடல்கள் கொண்ட நூல் இது. தனி வாழ்க்கை, மது, மதம், சாதி, அரசியல், தொலைக்காட்சி, திரைப்படம், வானொலி, செய்தித்தாள், விளம்பரம், பரிசுச்சீட்டு, பொதுவாழ்க்கை—ஆகிய தலைப்புகளில், முறையே, கல்லை: அருட்செல்வன், க.அ.ஒளியவன், குறிஞ்சி வேந்தன், பழனி: எழில்மாறன், கடலூர். மணிமாறன், ப.எழில்வாணன், ப.அறவாழி, வீர.கலாநிதி, சி.இறையரசன், ப.பரமசிவம், கோ.வெள்ளிமீன், ஓடவை: ந.தமிழ்வேந்தன்—ஆகிய பாவலர்கள் பெரும்பாலும் நிலை மண்டில(விருத்த)ப் பாக்களில் பாடிய பாடல்கள் நூலில் தொகுக்கப் பெற்றுள்ளன.

பாடல்கள் யாவும் மரபு பிழையாமல், தூய தமிழில் சிறந்து

Scanned with CamScanner

விளங்குகின்றன. புதுமை, மறுமலர்ச்சி, சீர் திருத்தக் கருத்துகள் எல்லாப் பாடல்களிலுமே குமிழியிடுகின்றன.

முனைவர் தமிழண்ணல் அவர்களின் அணிந்துரையும், பேராசிரியர் ப.காளிமுத்து அவர்களின் ஆய்வுரையும் நூலின் பெருமை பாராட்டுகின்றன.

பாட்டுத் திறமும், பட்டறிவும், தூய தமிழ்ப் பற்றும் கொண்டிலங்கும் தகுதிச் சான்ற பாவலர்கள் பாடிய இந்நூல் நல்ல இலக்கிய வரிசையில் இடம் பெறத் தக்கது. ஆர்வலர்கள் வாங்கிப் போற்றுக.

3. நூல்: சங்கே முழங்கு (பாடல் தொகுப்பு.)

ஆசிரியர்: கடவூர் மணிமாறன்.
பக்கம்: 104 விலை: உருபா 10.
வெளியீடு: விடியல் வெளியீட்டகம, 109 மேலைத் தெரு, கிருட்டிணராயபுரம். 639102.

பாவலர் கடவூர் மணிமாறன் அவர்களின் பாடல் தொகுப்பு நூல் இது. தமிழ், தமிழ்நாடு, ஆசிரியர், மாணுக்கர், புலவர், எழுத்தாளர், பொழிவாளர், இதழாளர், இளைஞர், பெண்டிர், உழவர், வணிகர், மருத்துவர், செல்வர், குடிமக்கள், அரசியலார், பரிசுச் சீட்டு, திரைப்படம், சங்கே முழங்கு, நாமே வெல்வோம், பதவிக்கு அடிமை ஆகிய இருபத்தொரு தலைப்புகளில் பாவலர் பாடிய நறும் பாடல்கள் இவை.

முனைவர் மு.பி.பாலசுப்பிரமணியம் அவர்களின் அணிந்துரையும், தமிழ்ச்சுடர் மீ.சு.இளமுருகு பொற்செல்வி அவர்களின் பாராட்டுரையும், புலவர் இ.கோமதி நாயகம் அவர்களின் மதிப்புரையும், பாவலரேறு அவர்களின் வாழ்த்துப்பாவும் நூலின் பெருமையையும் அருமையையும் கட்டியங் கூறி நிற்கின்றன.

'கொள்கைப் பாவேந்தும் செம்புரட்சி செயவந்த பயன்மிகு நூல்'—என்பது பாவலரேறு அவர்களின் தகவுரை.

'தற்காலத் தமிழகத்தின் அவல நிலையைக் கண்டு பாவலரின் பாநெஞ்சம் எப்படியெல்லாம் கொதிக்கிறது; குமுறுகிறது; கொந்தளிக்கிறது'—என்று வியக்கிறார், முனைவர் மு.பி.பா—.

"நூல்கள் பல ஆக்கித் தமிழ்த் தாய்க்குச் சூட்டிய பாவலர் தம் நினைவுகளாயினும் சரி, எழுத்துகளாயினும் சரி, எழுத்துகளில் ஏற்றம் பெற்று நிற்கும் கருத்துகள் தமிழ், தமிழர், தமிழ் நாடு என்பவைதாம்'—என்று பாராட்டுகிறார் மீ.சு.இ.பொ. அவர்கள். 'தொடக்கக் கால முதல் தமக்கென்று வகுத்துக் கொண்ட கொள்கைப் பிடிப்போடும் உண்மையை உண்மையாகவே எடுத்துரைக்கும் உணர்வுத் துடிப்போடும் எழுதியும் இயங்கியும் வருபவர் பாவலர் மணிமாறன்'—என்று மதிப்புரை கூறுகிறது.

'இந்நகைய கருத்துகளைக் கடலூர் மாறன்
எடுத்துரைத்த பின்னர்தாம் நாமுணர்ந்தோம்'
—என்று பெருமைப் படுகிறார், பாவலர் கன்னல்.

சிறந்த பாக்கள்; தூய தமிழ் நடை; உயர்ந்த கருத்துகள்! தகுதியுள்ள தமிழிலக்கியம்! அனைவரும் வாங்கிப் படித்துப் பயன் பெறுக!

4. நூல்: **பாவாணர் நூல்களில் பழமொழிகள்.**

ஆசிரியர்: சி.பூ.மணி.
பக்கம்: 64.   விலை: உருபா 8.
கிடைக்குமிடம்: C.P.Mani, N. 10/2, Vth Cross,
L.N.Puram, Bangalore-21.

தனித்தமிழ்த் தொண்டரும், 'தென்மொழி' அன்பரும், பாவாணர் மேல் பேரன்பும் கொண்ட சி.பூ.மணி அவர்களால் தொகுக்கப் பெற்ற நூல் இது.

மொழி ஞாயிறு பாவாணர் அவர்களின் 24 அரிய நூல்களி லிருந்தும், 'தென்மொழி'யில் அவர் எழுதிய கட்டுரைகளிலிருந் தும், அவர் பயன்படுத்திய 872 பழமொழிகளையும் அகர வரிசை யில் ஆசிரியர் தொகுத்துக் கொடுத்துள்ளார்.

ஏற்கனவே தமிழில் வழங்கும் சுவையான பழமொழிகளுடன், அவர் பயன்படுத்திய மலையாளம், துளு, இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வழங்கும் பழமொழிகளும் தொகுத்துத் தரப் பெற்றுள்ளன.

பழமொழிகள் பட்டறிவு சான்ற அறிவு மொழிகள் ஆதலின் அனைவரும் படித்து மகிழவும் அறிவு பெறவும் சூழ்நிலைக் கேற்ப எடுத்துப் பயன்படுத்தவும் இவை பெரிதும் உகந்தவையாக இருக் கும். எடுத்துக் காட்டுக்குச் சில தனியாகத் தரப் பெறவுள்ளன. தமிழார்வலர்கள், எழுத்தாளர்கள், சொற்பொழிவாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் அனைவருக்கும் உகந்த கைந்நூல்! வாங்கிப் பயன் பெறுக.

இந் நூலில் அச்சிட்டுள்ள பழமொழிகளில் சில குறைகளும் பிழைகளும் சேர்ந்திருப்பதைக் குறிப்பிடாமல் இருக்க இயல வில்லை.

'முருங்கை பருத்து முட்டுக்கல் ஆகுமா?' என்னும் பழமொழி (பக்.49)யில், 'முட்டுக் கால்' என்றிருக்க வேண்டும்.

'முழுப் புல்லை, முக்கால் மயிலை, அசைச் சிவப்பு, கால் பருப்பு என்னும் பழமொழி (பக் 49)

'முழுப் புள்ளி, முக்கால் மயிலை, அரைச் சிவப்பு, கால் மழுப்பு' என்றிருத்தல் வேண்டும்.
—இது மாடுகளின் தரங்களைக் குறிக்கும் பழமொழி. இதன் பொருள்: புள்ளியுடைய மாடு முழுமையாக நல்லது; அல்லது

உழைப்பது. மயிலை(கருப்பு)நிறமுடைய மாடு முக்கால் உழைப்புத் தரும்; அல்லது முக்கால் நன்மை தரும். சிவப்பு (செவலை) நிறமுடைய மாடு பாதி உழைப்புத்தரும்; அல்லது பாதி நன்மை தரும். பழுப்பு நிறமுடைய மாடு கால் உழைப்புத் தரும்; அல்லது கால் நன்மை தரும்—என்பது.

இதே போல் இன்னொரு பழமொழியும் உண்டு. அதுவும் இதில் குறிக்கப் பெற்றுள்ளது. அது இறைச்சிச் சுவையைப் பற்றியது.

'முழு வுடும்பு,முக்கால் காடை, அரைக் கோழி, கால் ஆடு'—என்பது. அஃதாவது உடும்புக் கறி முழுச் சுவையுடையது; காடைக் கறி முக்கால் சுவை உடையது;கோழிக்கறி அரைச்சுவை உடையது; ஆட்டுக்கறி கால் சுவையுடையது என்பது பொருள்.

பக்கம் 50-இல், 'யாவையும் பாடிக் கோவையைப் பாடு'—என்பதில், 'கோவையும்' என்றிருத்தல் வேண்டும்.

பக்கம் 51-இல் 'வடக்கத்தியானையும் வயிற்று வலியையும் நம்பக் கூடாது'—என்பதில்' வடக்கத்தி யானை என்று, பிரித்திரிப்பது தவறான பொருளையும் தந்து விடும்.

அதே பக்கத்தில் 'வாழை வடக்கு வான்கமுகு தெற்கு சோலை கிழக்கு துய்ய பலா மேற்கு' என்னும் பழமொழியில் 'கமுகு' என்பது 'கழுகு'என்றிருப்பது அச்சுப் பிழையாக இருக்கலாம், ஆனால் பொருள் குழப்பம் தரும்படி உள்ளது.

'வாழை மரம் வடக்குப் பக்கம் குலை சாய்க்கும்; வான் உயர்ந்த கமுகு (பாக்கு) மரம் தெற்குத் திசையில் குலை தள்ளும்; சோலை (தாழை) மரம் கிழக்குத் திசையில் மடல் அவிழ்க்கும்; தூய்மையான (சுவையான) பலா மரம் மேற்குத் திசை நோக்கிப் பூக்கும்'—என்பது பொருள்.

பக்கம் 54-இல் 'செறு விரல் வீங்கியால் பெருவரல் ஓளம்'—என்னும் பழமொழியில் உள்ள 'பெரு வரல்' என்பது'பெரு விரல்' என்றிருத்தல் வேண்டும். இவை போல் இன்னும் சிலவும் உண்டு. அச்சுக்கு முன் தக்கார் ஒருவரிடம் மூலத்தைக் காட்டியிருப்பின் நல்லது.

5. நூல்: **கண்ணீர்த் தமிழ். (பாடல்கள்)**

ஆசிரியர்: பாவலர் கருவூர் கன்னல். விலை: 15-00
பக்கம்: 136.
வெளியீடு: தமிழ்ப் பாசறை, கருவூர்-1

பாவலர் கருவூர் கன்னல் அவர்களின் 46 பாடல்களின் தொகுப்பு நூல் இது. பாடல்கள் அனைத்தும் மரபு வழுவாத பாடல்கள். இத் தொகுப்பிற்குப் பேராசிரியர் க.அன்பழகனார், முனைவர் சி.பாலசுப்பிரமணியனார். முனைவர் சிலம்பொலி செல்லப்பனார், பாவலர் கடவூர் மணிமாறன், கோவை. கணியன், இராச.விசயக்குமார் ஆகிய அறுவரும் அணிந்துரை, ஆய்வுரை, மதிப்புரை,பாராட்டுரைகள் வழங்கியுள்ளனர்.

Scanned with CamScanner

பாடல்கள், தஞ்சை அமுதம், தென்மொழி, தமிழ் நிலா, வளருந் தமிழ், காஞ்சி, தமிழ் நிலம், செங்கதிரோன், தமிழ்ச்சுடர், வண்ணப் பூங்கா—ஆகிய இதழ்களில் வெளிவந்தனவும், சில கருத்தரங்கு, பாவரங்குகளில் படிக்கப் பெற்றனவும், பிறவும் ஆகும். இவற்றுள் தேய்ந்த நிலா, கொக்கு, கைதியின் இல்லம் மூன்றும் நெடும் பாடல்கள். பாடல்கள் அனைத்தும் பெரும்பாலும் தூய தமிழில் இலங்குகின்றன. நல்ல கருத்தோட்டம் கொண்டன; தமிழ், தமிழர், தமிழ்நாடு என்று முழங்குகின்றன:

'இதுதானா தமிழ்நாடு? இந்த நாட்டில்
இருப்பவர்கள் எல்லோரும் தமிழர் தாமா?
மதுவாக இனிக்கின்ற தமிழை நாட்டில்
மனமெங்கும் வளர்ப்பதற்கு மறந்தேன்
வாழ்ந்தார்?'

—என்று கன்னல் கனன்று கேட்கின்றார். இன்னும் அவரின் வினக்கள் அடுக்கடுக்காக எழுந்து கனல் எழுப்புவதைக் கேளுங்கள்.

'சாதிமதம் இல்லாத தமிழர் நாட்டைச்
சமைப்பதுதான் எக்காலம்? தமிழில் பேசி
ஓதுகின்ற கலப்புமணம் கோடிக் கோடி
ஓயாமல் நடக்கின்ற நாளும் எந்நாள்?'

உழைப்பைக் கொள்ளையிட்டே
உண்டு கொழுப்பவரின்
பிழைப்பில் மண்போடப்
போராட்டம் நடத்துதற்கே
அழைப்பு விடுக்கின்ற
ஆற்றல் மிகு தலைவனுடன்
இழைத்து வாழ்வதுதான்
எக்காலம்? எக்காலம்?

தமிழர்களின் வெற்றியையும் தோல்வியையும் ஒரு பாடலில் விளக்குகின்றார், கன்னல்!

'கங்கை வரை படையெடுத்தோம், வெற்றி கண்டோம்!
கடாரத்தை முறியடித்தோம், திரும்பத் தந்தோம்!
சிங்களரைத் தெற்குநோக்கி ஓட வைத்தோம்!
செந்தமிழர் பரம்பரையைத் தோற்று வித்தோம்!
வெங்கொடுமை ஆரியரைத் தாக்கி, அங்கே
வெற்றிக்கொடி பறக்கவிட்டோம்! இன்றோ இங்கே
பங்காளிச் சண்டைகளால் நமக்குள் நாமே
பாய் நாய்கள் போல் கடித்துப் பகைத்துக் கொண்டோம்!

தனித் தமிழை வளர்ப்பதே அவர் கொள்கை முழக்காய் வெளிப்படுகிறது:

'வடமொழியாய் ஆங்கிலமாய்
வழங்கி வரும் சொற்களுக்கு
நடமாடும் தனித்தமிழை
நாட்டவேண்டும் எனக் கூவாய்!'

'தெருவுக்கும் ஊருக்கும் தீந்தமிழில் பெயர் மாற்றம்
உருவாக வேண்டுமென உணர்ச்சியுடன் கூவிடுவாய்!'

என்று குயிலை வேண்டும்பொழுதும்,

'தனித்தமிழை அழிக்கவரும் தடியர்களைச் சாய்ப்பதற்கா
மணிக் கணக்கில் தூங்காமல் மலரே நீ இருக்கிறாய்?'

—என்று குழந்தைக்குத் தாலாட்டுப் பாடும் பொழுதும் அவர் உயிருணர்வில் தனித்தமிழ் வளர்க்கும் நோக்கம் வெளிப் படுகின்றதன்றோ?

'தனித்தமிழை அழிக்கவரும் ஏடு—தமிழர்
தலையெடுக்க விடாத பெருங் கேடு'

—என்று தனித்தமிழ் வளர்ச்சிக்குக் கேடு செய்யும் இதழ்களைச் சாடுவதும் அவ் வுள்ளத்து உணர்வுதான்! காதலியிடம் கொஞ்சும் போதும், கன்னல், தமிழை மறந்ததில்லை போலும்!

'இடுப்பொடிய அவன் அணைப்பான்! மேலும் என்னை
இறுக்கிக்கொள் எனச்சொல்வாள்! தழுவிக்கொள்வான்!
வெடுக் கென்று செவ்விதழில் முத்த மிட்டு
விளைந்ததமிழ்க் கன்னத்தைப் பற்றிக் கொள்வான்!'

—என்பது, அவர் காட்டும் காதல் காட்சியில் ஒரு துளி! இவரைப் பற்றிச் சுருக்கமாகப் பாவலர் கடவூர் மணிமாறன் தரும் தகுதிப் பா இது:

'பாவேந்தர் விருதுபெற்ற புலமை யாளர்!
பாட்டரங்கில் பட்டிமன்றில் இடிபோல் ஆர்க்கும்
நாவேந்தர்! கருவூரில் வாழும் நண்பர்!
நற்றமிழைப் பயிற்றுவதில் திறமை மிக்கார்!'

தென்மொழி

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்,
ஒவ்வொரு தமிழத் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

ஆண்டுக் கட்டணம்	: உருபா	36.00
அரையாண்டுக் கட்டணம்	: ,,	18.00
தனியிதழ்	: ,,	3.00

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின்
கொள்கைகள் அடங்கிய மாத இருமுறை இதழ்:

தனியிதழ்	விலை உரு.	1-50
ஆண்டுக் கட்டணம்	,, ,,	36-00
அரையாண்டுக் கட்டணம்	,, ,,	18-00

தொடர்புக்கு : தமிழ்நிலம், 5, அருணாசலத் தெரு, சென்னை 5-

அத்திப்பூ!

நாடக ஆக்கம்: -அதியமான்

(பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின்
'பாவியக் கொத்'தில் ஒரு மலர்!)

(காட்சி-5)

உறுப்பினர் : அன்பரசன், முத்தப்பன்.

இடம் : தொடர்வண்டி நிலயம், மரத்தோப்பு.

காலம்: காலை.

நிலை : பூத்த அத்திப்பூ பயன் தருகிறது.

முத் : (தொடர் வண்டியிலிருந்து கையில் ஒரு பெட்டியுடன் இறங்கி வருகிறான்.)

அன் : (முத்தப்பனைக் கண்டு) அடேயப்பா, முத்தப்பா! ஏன்டா நீண்ட நாள்களாகக் கடிதமும் எழுதவில்லை. தா பெட்டியை என் கையில், நான் கொண்டு வருகிறேன்.

முத் : வேண்டாம். அன்பரசு உன் திருமண நாளை எனக்குத் தெரிவிக்க வில்லையே ஏன்? மறந்து விட்டாயோ?

அன்: எப்படியடா உன்னை மறப்பேன். நீ எங்கே இருக்கிறாய்? எப்படி இருக்கிறாய், என்ன செய்து கொண்டிருக்கிறாய் என்று யாருக்குத் தெரியும்? முகவரி இல்லை. நீயும் எழுதவில்லை கடிதம்.

முத் : நீ ஊரில் இருக்கிறாயோ என்று ஐயம். ஆனால் என் நண்பன் ஒருவனுக்குக் கடிதம் எழுதி உன்னை உசாவ(விசாரிக்க)ச் சொல்லி இருந்தேன். அவன் உன் பெயர் கொண்டோர் யாரும் இல்லை என்று விடை எழுதி விட்டான். அதன் பிறகு நீ வேலை தேடி எங்கேயும் போய்விட்டாய் போலும் என்று இருந்து விட்டேன். ஏனென்றால் தமிழன் வேலை தேடி நாடு நாடாக நாடோடியாகத் திரிகிறானே. அந்த நிலையை உணர்ந்துதான் நீயும் எங்கேயும் போயிருப்பாய் என்று இருந்து விட்டேன். ஆனால் மறக்கவில்லை. அடிக்கடி நினைத்துக் கொள்வேன்.

அன் : சரி, அதோ அப் பக்கம் சென்று குளம்பி (Coffee) குடிக்கலாமா?

முத் : சரி. நாம் இரண்டு பேரும் தேனீர் குடித்து நீண்ட நாள்கள் கடந்து விட்டன. போவோம் வா.

அன் + முத் : (இருவரும் தேனீர் குடித்த பின் நடந்து கொண்டே)

முத் : அன்பா, உனக்குத் திருமணம் முடிந்து விட்டது எனக் கேள்விப் பட்டேன். ஓடோடி வருகிறேன். ஏன்டா அன்பு, பெண் யார்? எவ்வளவு நகை? கையில் பணமாக எவ்வளவு? சீர் என்ன? சீராட்டு என்ன? வண்டி, கிண்டி எதுவும் வாங்கித் தந்தார்களா?

அன் : ஏன்டா, இத்தனையும் கேட்டாயே, பெண் குணம் எப்படி என்று கேட்டாயா? எத்தனைப் பெரியோர்கள் நம் நாட்

டில் தோன்றி இவற்றை யெல்லாம் பெண் வீட்டாரிடமிருந்து வாங்கக் கூடாது என்று சொன்ன பிறகும் இன்னும் அதை மறக்க மாட்டாய் போலும்!

முத் : சீர்திருத்தம் புரட்சி இவையெல்லாம் மேடையோடு சரி. எத்தனை பேசினாலும் குமுகாயப் பழக்கத்தை மாற்றக் கூடாதுடா.

அன் : 'கற்றபின் நிற்க வேண்டும்' என்று வள்ளுவர் சொல்லி இருக்கிறார். சொன்னபடியும் நடக்க வேண்டும்.

முத் : திருவள்ளுவர் தாமே சொல்லி இருக்கிறார்; நீ சொல்ல வில்லையே! யார் யாரெல்லாமோ என்னவெல்லாமோ சொன்னார்கள். சும்மா நேரப் போக்குக்கு அதை யெல்லாம் போய்க் கேட்பானேன்? பிறகு அவர் பெயரைச் சொல்லிப் பிழைப்பு நடத்துவானேன்? வள்ளுவர் என்ன உனக்கும் எனக்குமா சொன்னார்? ஊருக்குச் சொன்னார். திருவள்ளுவர் இப்போது இருந்து கொண்டு, அன்பரசு, நாம் சொன்படி நடக்கிறானா, இல்லையா, என்று பார்த்துக் கொண்டா இருக்கிறார்?

அன் : அப்படிப் பேசாதேடா. நீ தமிழ் நாட்டை விட்டு போய் விட்டாய் அல்லவா? அதனால்தான் இப்படிப் பேசுகிறாய்; திருவள்ளுவர் நமக்காகவே அறநெறிகளைச் சொன்னார்; எழுதியும் வைத்தார். முத்தப்பா, நல்ல பண்புகளைக் கடைப்பிடிக்கப் பண்புடையார் தோன்றா விட்டால், மாந்த இனம் மண்ணுக்குள் மாய்ந்து போகும். தமிழ் அறிஞர்களை எளிதாக நினைக்காதே; தமிழ் இனம் நன்கு வாழவே வழி வகுத்தார் வள்ளுவர். யாருக் காக எழுதினாரோ அவர்கள் அதை மறக்கக் கூடாதுடா.

முத் : ஆமாம், ஆமாம்! ஒன்றை மட்டும் மறக்காமல் இருக் கிறான்.

அன் : எதை?

முத் : பொருள் சேர்ப்பதை. ஒரு பொருள் என்று நினைக்கத் தகுதி அற்றவனையும் தகுதியுடையவனாக ஆக்குவது பொருள். அதனால் எப்படியும் பொருளைச் சேர்க்க நாயாக அலைகிறான். அவர் ஏன் சொன்னார், எப்படிச் சொன்னார் என்பதை யெல்லாம் சிந்திக்காமல் ஒரு நான்கு குறளைப் படித்து விட்டால் போதும்! அவன் இங்கு மேடைப் பேச்சாளி. அன்பரசு தமிழ்ப் படித்தவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் தெரியுமா?

அன் : என்ன செய்து கொண்டிக்கிறார்கள்?

முத்: வள்ளுவரும் கம்பரும் சந்தித்தால் என்ன பேசிக் கொள் வார்கள் என்று பட்டி மன்றம் போட்டுப் பணம் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஏன், அன்பு, கம்பன் பணத்திற்குப் பாடிய வர். வள்ளுவர் இனத்துக்குப் பாடியவர். இரண்டு பேரும் என்ன பேசுவார்கள்? தெரியுமா? ஒன்றும் பேச மாட்டார்கள்.

அன் : உண்மை தான்; நீ திருக்குறள் கூற்றுப்படி நடக்கிறாயா? எப்படி?

முத் : அப்படியானால் உன்னிடம் இப்படிப் பேச மாட்டேன். நான் படிக்கிற காலத்தில் தேர்விற்காகக் குறளைப் படித்தேன். அது முடிந்ததும் திருக்குறளும் முடிந்தது. இப்போது நான் என்ன நினைக்கிறேனோ அதுவே என் வாழ்க்கை. அது கிடக்கட்டும், உன் திருமணம் பற்றி சொல்.

அன் : ஆமாம். சொல்லுகிறேன் (ஒரு தோப்பைக் காட்டி) அதோ அந்தத் தோப்புப் பக்கம் போவோம். ஆர அமர்ந்து பேசுவோம்.

அன் + முத் : (தோப்பில் போய் சேர்ந்து அமர்ந்து)

முத் : என்ன, அன்பு! திருமணம் நடந்து எத்தனை நாளாயிற்று?

அன் : நேற்றுத் தாண்டா.

முத் : அடே! அப்படியானால் முதல் இரவை முடித்து விட்டு வருகிறாய் என்று சொல்.

அன் : அதைத்தான்டா உன்னிடம் சொல்ல வேண்டும். இன்ப இரவு துன்ப இரவாக மாறி, அதை எப்படியோ இழுத்துப் படுக்க வைத்திருக்கிறேன்.

முத் : நீ என்ன சொல்லுகிறாய்? புரியவில்லையே.

அன்: அவளைப் பார்த்ததேனே தவிர, கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை போ.

முத் : சீ, சீ, இந்தப் பழம் புளிக்கும் என்ற கதையா? அப்போ!

அன் : வேறு கதை எதற்கு? என் கதையைக் கேள். திருமணம் முடிந்தது. முதல் இரவும் தொடங்கியது. அறைக்குள் அவள் வருவதற்கே காலம் நீண்டது.

முத் : ஏனோ?

அன்: கதையைக் கேள். ஓர் ஐந்து ஆறு பெண்கள் கூடி அவளை நானிருந்த அறைக்குள் தள்ளி விட்டுக் குலுங்கிக் குலுங்கிச் சிரித்துக் கொண்டு போய் விட்டனர். அவளோ என் பக்கம் வரக் கூசி, கதவண்டை கால் கடுக்க நின்று கொண்டிருந்தாள்.

முத் : ம், சரி.

அன்: நின்றவளை உற்றுப் பார்த்தேன். அழகு இருந்தது. அன்பு இருந்தது, உணர்வு இருந்தது, இன்பம் இருந்தது, வனப்பிருந்தது. கைகள் இருந்தன, கால்கள் இருந்தன, கண்கள் இருந்தன, வாய் இருந்தது, பேச்சுமட்டும் இல்லாதிருந்தது.

முத் : நீயே பேச வேண்டியதுதானே.

அன்: பேசுவதற்காகத்தான், அவளை என் கையால் இழுத்தேன்; என் பக்கத்தில் அமரவைத்தேன்.

முத் : ங், சரி, முடிந்தது. அவ்வளவு தானே.

அன்: இன்னும் உண்டு, கேள்.

முத் : இனி எதைக் கேட்கச் சொல்லுகிறாய்? சொல்லு சொல்லு.

அன்: ஒரே அழுகை அழத் தொடங்கி ஒரே கண்ணீர் அருவி,

முத்: அழத்தானே செய்வாள். ஒரு பெண்ணிடம் முதலிரவில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது உனக்குத் தெரிய வில்லை என்று அவள் நினைத்துத்தான் அழுதிருப்பாள். உனக்கோ...

அன்: பொறுடா. வலைக்கு முன்னால் கல்லைத் தூக்கிப் போடாதே: அழுதவளிடம் அன்பு காட்டி, இன்பம் ஊட்டி, வன் சொல் நீக்கி, இன் சொல் பேசிப் பார்த்தேன். அவளோ அழுதாள், அழுதாள், அழுதாள்; அழுதுக் கொண்டே இருந்தாள். எனக்கோ ஒரு பக்கம் விருப்பம், இன்னொரு பக்கம் வெறுப்பு.

முத்: என்ன கரணியம் எனக் கேட்டுப் பார்த்தாயா?

அன்: கொஞ்சிக் கொஞ்சிப் பேசிக் கெஞ்சிக் கெஞ்சி கேட்டேன்;

முத்: சொல்ல வில்லையோ?

அன்: ஒரே அழுகை, அதுவும் ஏங்கி ஏங்கி அழுதாள்.

முத்: வெட்கமாக இருந்திருக்கும்! நாணம் என்பது பெண்களுக்கு ஏற்பட்ட ஒரு குணமாயிற்றே! சரி, பிறகு.

அன்: என்னடா! இந்த முதலிரவே இப்படி இருக்கிறதே இனி வாழ்க்கையை இவளோடு நடத்த முடியுமா என்ற ஓர் ஐயம். கையைப் பிடித்து மறுபடியும் கேட்டேன். உனக்கு என்ன குறை என்று ஒவ்வொன்றாய்க் கேட்டுப் பார்த்தேன்.

முத்: அவளிடந்தான் ஒரு குறையும் இல்லை என்று நீயே சொல்லுகிறாயே; பின் ஏன் குறை வரப் போகிறது?

அன்: பிறகுதான் தெரிந்தது. எல்லா வகை நல்ல குணங்களும் இருந்தன. ஆனால் ஒன்று மட்டும் இல்லாதிருந்தது.

முத்: என்னடா அது.

அன்: கற்பு மட்டும் இல்லை. (கண்கலங்கிக் கண்ணீர் விடுகிறான்.)

முத்: சீ, நீ ஓர் ஆணா? பெண் மாதிரி அழுகிறாய்? முட்டாள். அவளிடம் கற்பு இல்லை என்று எப்படியடா தெரிந்தது. அதைக் கண்டு பிடிக்க முடியாதே.

அன்: முடியாதது தான்: அவளே அவளிடம் கற்பு இல்லை என்று சொன்னாள். அதும் அவளின் குற்றமில்லை என்றும் தருக்கித்தாள்.

முத்: ஏன்டா, அன்பு, இவ்வுலகத்தில் எங்கேயும் நிகழாத ஒன்றைச் சொல்லுகிறாய். ஒரு பெண்ணிடம் கற்பு இருக்கிறதா இல்லையா என்று எவனும் கண்டு பிடித்தது இன்று வரை இல்லை; நிலவில் கூட ஆள் இல்லை எனக் கண்டு விட்டான். கற்பை இல்லையென்று எவனும் சொல்ல முடியாது. அப்படிப்பட்ட ஒரு கமுக்கத்தை எந்தப் பெண்ணும் சொல்லவே மாட்டாள். ஏய்! நான் நினைக்கிறேன் அவள் யாரையும் காதலித்துப் பழக்கப்பட்டவளாக இருக்கும். திருமணம் என்ற இந்த நிகழ்ச்சி அவளைப் பிரித்து விட்டது: அவளால் திருமணத்தை மீற முடிய வில்லை; அதனால்

உன்னிடமிருந்து மீள இப்படி ஒரு பொய்யைச் சொல்லி இருக்கலாம்.

அன்: உண்மை அளவோடு இருந்திருக்கிறது; அவள் சொன்ன பின் அது மெய்யாயிற்று. (மீண்டும் அழுகிறான்.)

முத்: (தோள்களைப் பிடித்துக் குலுக்கி) அடே சும்மா இருடா; அழாதே. விளத்தங்களைச் சொல். அன்பு, ஊரிலே யாரும் இவளிடத்தில் கற்பு இல்லை என்று சொல்லுகிறார்களா?

அன்: அதுவும் இல்லை முத்து: அனைவருமே இவளை நல்லவள் என்றே கூறுகின்றனர். மேலும் ஒருவர் கற்பைப் பற்றி மற்றவருக்குத் தெரியாது. இவள் கற்பைப் பற்றி யாருக்குத் தெரியும்?

முத: அதுவும் உண்மைதான்; இறுதியாக உன்னுடைய முதலிரவு எப்படி முடிந்தது?

அன்: என்னிடம் கற்பில்லை எனவே நான் சாகப் போகிறேன் என்று மின்சாரக் கம்பியில் பாயப் பார்த்தாள்; நான் உடனே தடுத்து, அவளைக் கற்பழித்தது நான்தான் என்று ஏற்றுக் கொண்டேன்.

முத்: அப்படியானால் அவளைக் கற்பழித்தது யாராம்?

அன்: அதுவும் அவளுக்குத் தெரியாதாம். வன்முறையில் ஒரு கயவனால் கற்பழிக்கப் பட்டுள்ளாள்; அவன் யார் என்றும் அவளுக்குத் தெரியாதாம். அதனால்தான் நான் என்றதும் நம்பி விட்டாள்.

முத்: பிறகு என்ன சொன்னாள்?

அன்: வாயாலா சொன்னாள்? கையால் பேசினாள்; என்னைக் கண்ட மட்டும் என் கன்னத்தில் மாறி மாறி அடித்தாள்.

முத்: நீ...

அன்: பொறுத்துக் கொண்டேன்!

முத்: ஏன் அன்பு, நீ தான் அவளைக் கற்பழித்தாயா?

அன்: நான் ஒழுக்கத்தை உயிராகக் காப்பவன்; உனக்குத் தெரியுந்தானே.

முத்: உண்மைதான். பின் ஏன் அப்பழியை நீ ஏற்றுக் கொண்டாய்?

அன்: அவள் உயிரைக் காக்கத்தான்; அவளுக்கு வாழ்வளிக்கத்தான்; அவள் பெண் என்பதால் இருவர் சேர்ந்து செய்த குற்றத்தை ஒருவர் மீது அதுவும் பெண் மீது சுமத்தி வன்கொலை செய்வதைத் தவிர்க்கத்தான்.

முத்: உன்னைப் போல முட்டாள் யாரும் இருக்க மாட்டார்கள். ஒரு பெண்ணே, தான் கற்பழிந்தவள் என்று உறுதிப் படுத்துகிறாள். நடந்த நிகழ்ச்சியைக் கொண்டு சான்று பகன்று இருக்கிறாள். நீ நம்பும் படி அவளுடைய பேச்சுகள் உள்ளன. அப்படி இருந்தும் நீ ஏமாறி இருக்கிறாய்;

அன்: ஓர் உயிர் வீணாகப் போகலாமா?

முத் : அதை உணர்ந்து, அவளல்லவா எச்சரிக்கை உணர்வோடு நடமாடி இருக்க வேண்டும்.

அன் : அவளா போய் என்னைக் கற்பழி என்று நின்ருள்? மாந்தன் உருவில் இருந்த ஒரு கயவன் வன்முறையில் அதைச் செய்திருக்கிருன். அவன் தப்பித்து விட்டான். அதே தவற்றிலிருந்து ஒரு பெண்ணும் தப்பிக்க வேண்டுமல்லவா?

முத்: அவன் ஆண். அவனை இந்த குமுகாயம் ஒன்றும் செய்யாது.

அன்: அவனும் கற்பிழந்தவன் தானே. அப்படி இருந்தும் அவன் இன்னெரு பெண்ணை அதுவும் தூயவளைக் கட்டிக் கொண்டு வாழலாம். என்ருல், ஒரு பெண்ணும் ஒரு தூயவனைக் கட்டிக் கொண்டு வாழக் கூடாதா என்ன?

முத் : பெண்ணை அப்படிக் குமுகாயம் ஏற்றுக் கொள்வதில்லையே.

அன் : ஏற்றுக் கொள்ள வைப்பதுதான் நம்முடைய கடமை. அச்செயலுக்கு நான் முன் மாதிரியாக இருந்து விட்டேன். நோய் தீர மருந்து அருந்த மறுத்தால், அருந்த வைக்க வேண்டும், அல்லது நோய் தீராதல்லவா?

முத் : உண்மைதான். அதைச் செய்வது யார்?

அன் : யார் யார் என்று இந்நாள் வரைக் கேட்டது போதும். யார் செய்ய முடியுமோ, செய்யட்டும். நாம் செய்யா விட்டாலும் துணையாகவாவது நிற்போம்.

முத் : அது முடியுமா?

அன் : நம்பிக்கை வேண்டும். முடியுமா நம்மால் என்ருல், தன் மீதே நம்பிக்கையில்லாதவன். அவன் மாந்தனு? தன்னையே நம்பாதவன் மிக இழிந்தவன். சற்று நினைத்துப்பார். அரிதில் செயல் செய்பவனே பெரியவன். அவ்வகைப் பெரியவர்கள் ஒரு நாட்டில் தோன்ரு விட்டால் இம் மாந்த இனம் அழிந்து போகும். அழிப்பதை விட ஆக்குவது மேலல்லவா?

முத்: சரிதான் அன்பு. அந்தப் பெண் அஃதாவது உனக்கு மனைவியாக வந்திருப்பவள் பெயர் என்ன?

அன் : கயல்விழி.

முத் : (சட்டென்று) ஆ! நான்தான் அவளைக் கற்பழித்தவன்.

அன் : ஏ, கரிசா, உன்னைக் கொலை செய்தாலும் குற்றமில்லை. விலை மதிக்க முடியாத ஓர் ஒழுக்கத்தை, கயவனே, சின்னவனே, சிதைத்து விட்டாயே. ஒரு பெண்ணின் இன்ப வாழ்க்கையை வன் கொலை செய்து விட்டாய் மடையா. உன்னை மன்னிக்க முடியாது. உன்னை மண்ணுக்கு இரையாக்கி விட்டுத்தான் வேறுவேலை பார்க்க வேண்டும். காமவெறியனே உன்னைச் சந்தியில் விட்டு வரி வரியாய்ப் பிளக்க வேண்டும். (இரு கைகளாலும் அவன் தலையைப் பிடித்து) ஒரு பெண்ணுக்கு எச்சரிக்கை உணர்வு வேண்டும் என்ருயே. முட்டாள்! நீ, ஏன் எச்சரிக்கை உணர்வோடு இருக்கவில்லை. நீ ஆண்; அந்த ஆணவத்தில் ஆடு மாதிரி அலையலாம் என்ரு

எண்ணினாய்; அவளை நீ கற்பழிக்கும் போது எப்படி அவள் துடித்திருப்பாள். நீயும் அது போன்றே துடித்துச் சாக வேண்டும். (மரத்துப் பக்கம் அவனை இழுத்துக் கொண்டு சென்று) வா, இந்த மரத்தில் உன் மண்டையை முட்டச் செய்து சாக வைக்கிறேன்.

முத் : அன்பு! வேண்டாம், வேண்டாம். என்னை மன்னித்து விடு. உன் வழக்கப்படி கயல்விழியை மன்னித்தது போல என்னையும் மன்னிக்க வேண்டும். அது தானே ஞாயம்.

அன் : அவளே உண்மையைச் சொன்னாள், அதனால்தான் மன்னிப்பு.

முத் : நானுந்தான் உண்மையைச் சொன்னேனே, என்னை ஏன் மன்னிக்கக் கூடாது?

அன் : (சிந்தித்து) ஆமாம்; உன்னையும் மன்னிக்கிறேன்: அதுவே ஞாயம். (கையை எடுத்து விட்டு) முத்து! வருந்தாதே. என் துயரத்தின் தூண்டலில் ஏற்பட்ட உணர்ச்சியால் விலங்காக மாறி விட்டேன். நான்தான் சீர்திருத்தம் பேசினேன்; அதை நான் செய்து காட்டுவதுதான் முறையானது. எனவே இந்த நிகழ்ச்சியை மறந்து விடு.

முத் : நம் நாட்டில் மறக்கக் கூடாதவற்றை மறந்து விடுகிறார்கள். இதை மறந்து விடுவதில் தவறில்லை. அன்பு (அன்பரசனின் காலில் விழப் போகிறான்) என்னை மன்னித்து விட்டேன் என்று இன்னும் ஒரு முறை சொல், அப்போதுதான் என் மனம் நிறைவு அடையும்.

அன் : நீ என் நெடுநாளைய நண்பன்: ஆடை அவிழ்ந்ததும் தானாகவே கை சென்று காப்பது போல் நண்பன்தான் இடுக்கண் களைவான்: எனவே செய்த பிழையையும் மன்னித்து விடுகிறேன். உள்ளங் கலங்காமல் முன் போலவே என்றும் நாம் நண்பர்கள்.

முத் : அன்பான நெஞ்சுணர்வால் இன்ப உலகைக் காண தீயதையும் மன்னிப்போர் வல்லவர்களே. அவர்கள் ஒரு சிலர் இருப்பதாலேயே இந்த உலகம் உயிரோடு இருக்கிறது. அறிவு மட்டும் இருந்தால் போதாது; அருளும் வேண்டும். இவ்விரண்டுமே உலகைக் காக்கும்; நீ தானப்பா இறைவன். வேறு எங்கும் இறைவன் இல்லை. அன்பான நெஞ்சுணர்வால் தீயதை மன்னிக்கும் நீயே அத்திப்பூ. அத்திபூக்கும்; ஆனால் அதைப் பார்க்க இயலாது. அதுபோல் நீ பூத்துப் பயனும் தந்து விட்டாய். இதைப் பிறர் அறிய முடியாது. (நடக்கிறான்)

அன் : நில். போகாதே. என் வீட்டிற்குவா. என் மனைவி உனக்காகப் பண்டங்கள் பல செய்து எனக்காகவும் காத்திருப்பாள். என்னோடு என் வீட்டிற்கு வந்துபோ.

முத் : வேண்டாம்! அன்பரசு வேண்டாம்! என்னை உதறி விடு. உன் மனைவியைத் தழுவி அவளுக்கு உயிர் கொடுத்து இந்த உலகை உன் அறிவாலும் அருளாலும் உய்யவைத்து, உயர்ந்து வாழ்க. நான் வருகிறேன். (மறைந்து விட்டான்.)

(திரை.)

(நாடகம் முற்றுப் பெற்றது.)

Scanned with CamScanner

நாடக முடிவுரை:

மதிப்பு மிக்க பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் 'பாவியக் கொத்து' பாவியத்தில் வரும் முதல்கதை 'அத்திப்பூ' இது நாடகமாக எழுதித் தென்மொழியில் வெளியிடப்பட்டு விட்டது. அனைவரும் படித்து மகிழ்ந்திருப்பீர்கள்.

இந் நாடகத்தில் உறுப்பினர் தேவை என்பதால் பாவியத்தில் குறிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிக்கு ஏற்றாற் போல ஆறு பெண் உறுப்பினர்களை நான்காக எண்ணிட்டு சேர்த்து எழுதி இருக்கிறேன்.

பாவியத்தில் பக்கம் 26-இல் இக் கதைத் தலைவி கயல்விழி ஒரு தோழியோடு இருள் சூழும் வரை அளவி இருந்து விட்டு, வீடேகுங் கால் முகந் தெரியா ஒருவனால் கற்பழிக்கப்படுகிறாள். அத்தோழி இருட்டும் மட்டும் என்ன என்ன பேசினாள், என்ற விளத்தம் பாவியத்தில் இல்லாதிருந்தது. அவர்கள் என்ன பேசினார்கள்? என்ற உரையாடலை அமைப்பதற்குப் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் எழுதிய "தமிழச்சியின் கத்தி" என்ற பாவியத்தைப் பற்றி இருவரும் பேசியதாக நாடகத்தை இழுத்துக் கொண்டு செல்லுகிறேன்.

ஏனென்றால் தமிழ் இலக்கிய ஆக்கங்களே புரட்சியாக இருப் பின் அதனைப் பரப்புவது கிடையாது. பாரதியாருக்கு வழங்கும் வாய்ப்பு நம் புரட்சிப் பாவலருக்குக் கிடைப்பது இல்லை. தமிழர்கள் இதனைப் பற்றிக் கவலைப்படவும் மாட்டார்கள். பாரதியாரைப் பற்றி வானொலியில் கேளாத நாளே இருக்காது. எங்கேயாவது ஓரிடத்தில் அவரைப் பற்றிக் கூறும் கருத்துகள் கட்டாயம் இடம் பெறும். தமிழ் பற்றியோ, தமிழினத்தைப் பற்றியோ, தமிழ் நாட்டைப்பற்றியோ பேசும் பேச்சாளர்கள், எழுத்தாளர்கள் பாரதியின் பாடல்களையே எடுத்தாளுகிறார்கள். பாரதிதாசனைப் பற்றிப் பேசுவது என்பது மிகக் குறைவு. இன்னுஞ் சிறிது காலம் சென்றபின் பாவேந்தர் என்றால் யார்—எனக் கேட்கும் நிலைவரும். கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை, நாமக்கல் கவிஞர் ஆகிய தமிழ்ப் புலவர்களை தமிழகம் மறந்து வருகிறது.

எனவே இனி தமிழ் உணர்வுடையவர்களே தமிழ் அறிஞர்களை அறிமுகஞ் செய்ய, தாங்கள் ஆக்கும் ஆக்கங்களில் சேர்க்க வேண்டும். அந்த முயற்சியில்தான் பாவேந்தரின் "தமிழச்சியின் கத்தி" இந் நாடகத்தில் சேர்க்கப் பெறுகிறது. இந் நாடகத்திற்கு அது பொறுத்தமாகவும் இருந்தது.

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் சொல்லும் கருத்துகள்—அவர்களின் பாவியங்கள் நாட்டு மக்களிடம் கட்டாயம் வந்தாக வேண்டும். நம் மக்களுக்குத் தெரிய வேண்டிய அறிவுரைகள், கருத்துகள் மிகுதியாக உள்ளன. எனவே 'அத்திப்பூ' பாவியத்தை நாடகமாக்கி இருக்கிறேன். ஐயாவின் பாவியக் கொத்து முழுவதுமே நாடகமாக்கப் பட்டு நாடக நூலாக வெளி வர அன்பர்கள் என்னை ஊக்குவிக்க வேண்டுகிறேன்.

இதன் நிறை குறைகளையும் எனக்கு அறிவித்தால் மிக நன்றியுடையவனாகவும் இருப்பேன்.

அதியமான்.

பாவலர் கடலூர். மணிமாறன் முனைவர் பட்டம் பெற்றார்!

(இடுநூல்: பாரதிதாசன்-பெருஞ்சித்திரனார்-ஓர் ஒப்பாய்வு)

(சிறப்புச் செய்தி)

கடந்த 26-8-91 திங்கள் காலை திருச்சியில் கடலூர் மணிமாறன் முனைவர் பட்ட வாய்மொழித் தேர்வு இனிதே நடைபெற்றது; பேரா.சிற்பி அவர்கள் தலைமை ஏற்றார். திரு. தினகரன், திரு.நாரா மகிழ்நன், திரு.நடுவை முவ.பரமசிவம், உள்ளிட்ட 'தென்மொழி' அன்பர்கள் பலரும் வருகை தந்திருந்தனர்; குளித்தலை 'தமிழ்ச் சுடர்' திரு.இளமுருகு பொற்செல்வி அவர்களும், திருவாட்டி: பொற்செல்வி இளமுருகு அவர்களும், வந்திருந்தனர். அறுபதுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

அறிஞர்கள் பலர் வினவிய வினாக்கட்கு அவர்கள் நிறைவு பெறும் வகையில் மணிமாறன் விடையிறுத்தார்; ஆய்வேட்டை மதிப்பீடு செய்தோர் நால்வர் ஆவர். முனைவர் திரு.க.ப. அறவாணனார், முனைவர் திரு. செ.வை.சண்முகம் (அ.ப.கழகம்) திரு: பேரா.தாமோதரனார். (மேற்கு செருமனி), ஆய்வு நெறியாளர் திரு.ப.கணேசன் ஆகியோர்.

உயர்ந்த நடையில் ஆற்றொழுக்காகச் செய்திகளும் கருத்துகளும் அழகுற இடம் பெற்றுள்ள இவ்வாய்வேடு பல்வேறு சிறப்புகளைக் கொண்டது எனத் தேர்வாளர் முனைவர் சிற்பி அவர்கள் மனந்திறந்து பாராட்டினார்கள். 'ஆய்வேட்டைப் படிப்பதன் மூலம், பெருஞ்சித்திரனார் படைப்புகளை முழுமையும் படிக்க வேண்டும் என்ற தூண்டுதலைப் படிப்பவர்க்கு உண்டாக்குகிறார் ஆய்வாளர்' என்றும், 'கடுமையான உழைப்பின் வாயிலாக ஆய்வுலகத்திற்குப் பெரும் தொண்டு புரிந்துள்ளார் ஆய்வாளர்' என்றும் குறிப்பிட்டார்.

தலைவர் திரு.சிற்பி அவர்களின் தொகுப்புரை முழுமையும் நாடாப்பதிவு செய்யப் பெற்றதாகத் திரு.மகிழ்நன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். பார்வையாளர்களில் திரு: தினகரன் உட்பட்ட சிலர், உரிய நேரத்தில் பெருஞ்சித்திரனார் பாடல்கள் சிலவற்றை அவையின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது.

'பெருஞ்சித்திரனார் படைப்புகளை ஆய்வு செய்து முழுமையான நிறைவுடன் ஆய்வேட்டை வழங்கும் வாய்ப்புக்கிட்டியது தமக்குத் தம் வாழ்நாளில் கிட்டிய பெரும், பேருகும்' என்றும், 'பிறவிப் பெரும் பயனை அடைந்து விட்ட பேரின்பத்தில் திளைக்கிறேன்' என்றும், 'இவ்வாய்வுக்கு ஒல்லும் வகையான் உதவியும், நேருரை வழங்கியும் பல்வேறு ஆக்க நிலைச் சிந்தனைகளை எடுத்துரைத்தும் வழிகாட்டிய பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களுக்குத் தம் நன்றி மலர்களைப் படையலாக்கி மகிழ்கின்றேன்.

என்றும், முனைவர் பட்டம் பெற்ற ஆய்வாளர், பாவலர் திரு.கடவூர் மணிமாறன் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

கடந்த 26-8-91 திங்கள் காலை 11 மணி அளவில் திருச்சி பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரியில், கோவை, பாரதியார் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் திரு. சிற்பி.பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் நிகழ்வுற்ற முனைவர் பட்ட வாய்மொழித் தேர்வின்போது ஆய்வாளர் கடவூர் மணிமாறன் அவர்கள் வழங்கிய ஆய்வுச் சுருக்கம்:-

ஆய்வுத் தலைப்பு: பாரதிதாசன் பெருஞ்சித்திரனார்—ஓர் ஒப்பாய்வு:
ஆய்வுநெறியாளர்: திரு.முனைவர். கு.ப.கணேசன் அவர்கள்
(தமிழ்த்துறை, பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி, திருச்சி)

பெருமதிப்பிற்குரிய புறநிலைத் தேர்வாளர் அவர்களே! ஆய்வு நெறியாளர் அவர்களே! வருகை புரிந்துள்ள தமிழ் அறிஞர்களே! அனைவருக்கும் என் பணிவான வணக்கம்.

பகுதி நேர ஆய்வாளராக ஏற்றுக் கொண்ட பாரதிதாசன் பல்கலைக் கழகத்திற்கும், ஆய்வுக்களமாக அமைந்த பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரிக்கும், ஆய்வினை முழுமை செய்ய ஒல்லும் வகையான் முறைப்படுத்தியும் நெறிப்படுத்தியும் வழி காட்டிய ஆய்வு நெறியாளர் அவர்கட்கும் என் உளங்கனிந்த நன்றி.

500 பக்கங்கட்கு மேற்பட்ட இவ்வாய்வேடு ஐந்தாண்டுக் காலக் கடுமையான உழைப்பில் அணியமாக்கப் பெற்றுள்ளது. அரிய, பெரிய ஆய்வேடாகவும் செறிவும் நிறைவும் வாய்ந்ததாக-வும் இது அமைந்திருப்பதாக இதனை மதிப்பீடு செய்த நான்கு பேராசிரியர்களும் உறுதி செய்துள்ளனர். நால்வரில் மூவர் இவ்வாய்வேடு உயர் சீர்த்தி (Highly Commended) மிக்கது எனப் பரிந்துரைத்துப் பாராட்டு வழங்கியுள்ளனர்.

இந் நூற்றாண்டுப் பாட்டு இலக்கியத் துறையில் குன்றிலிட்ட விளக்காக ஒளிர்பவர் பாவேந்தர் பாரதிதாசன். குடத்துள் விளக்காக இன்னும் இருப்பவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார். இரு பெரும் பாவலர்களுமே தமிழ் மொழி தமிழின, தமிழ் நாட்டு விடுதலையை முகாமையாகக் கொண்டவர்கள். இருவரும் தமிழுணர்வும் தன்மான உணர்வும் மிக்கவர்கள்.

இருவரின் பாடல்களிலும் காணக் கிடக்கும் சமன்பாடு, முரண்பாடு ஆகியவற்றைக் குறிப்பாகவும், ஒற்றுமைக் கூறுகள், வேற்றுமைக் கூறுகள், பொதுமைக் கூறுகள், மதிப்பீடு ஆகியன சிறப்பாகவும் இயல்கள் ஒவ்வொன்றிலும் தனித் தனியே விளக்கப் பெற்றுள்ளன. இருவரும் ஒன்றுபடும் இடங்கள் மிகுதி என்பதும், உறழ்ச்சியுறும் இடங்கள் மிக மிகக் குறைவு என்பதும் குறிப்பிடத் தக்க செய்தியாகும்.

இயல் பகுப்புகள்:

முன்னுரை, பாடுபொருள் ஒப்பீடும் படைப்புமுறை வெளிப்பாடும், தமிழுணர்வு, குமுகாய நோக்கு, கதை நெடும்பாடல்கள்,

Scanned with CamScanner

சொல்லாட்சியும் நடையும், முடிவுரை ஆகிய ஏழு இயல்களைக் கொண்டு விளங்குகின்றது இவ் வாய்வேடு.

முதல் இயலாகிய முன்னுரையில், இருபதாம் நூற்றாண்டின் இலக்கியப் போக்குகளை விளக்கிக் கூறியிருப்பதோடு, கவிதையின் இடம், கவிதையின் இலக்கணம், கவிஞனின் நோக்கம், காலத்தின் தாக்கம் ஆகியனவும் விரிவாகக் கூறப் பெற்றுள்ளன.

இரண்டாம் இயலில்இ ருவரின் பாடுபொருள்களின் தெரி-விலும் நிலவும் ஒப்புமைகள் உணர்த்தப் பெறுகின்றன. கருத்து வெளிப்பாட்டில் ஒத்த சிந்தனையும் ஒரே வகையான நோக்கும் போக்கும் கொண்டவர்களாக விளங்குவதை உரிய சான்றுகளு-டன் நிறுவிக் காட்டப் பெற்றுள்ளன.

வரலாற்றுப் பெருமையும் வளமும் கொண்டு திகழும் தமிழ் அனைத்து நிலைகளிலும் வலிவு (செல்வாக்கு)டனும் மேன்மையுட-னும் விளங்க வேண்டும் என்னும் விருப்பங் கொண்டவர்கள் இவர்கள். வடமொழி எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு, தமிழ்க்காப்பு, தமிழ் விடுதலை, தனித் தமிழ் ஆகிய பல கூறுகளைக் கொண்டதாக இவ் விருவரின் தமிழுணர்வும் பளிச்சிடுவதை மூன்றும் இயலாகிய தமிழுணர்வு எடுத்து மொழிகின்றது.

நான்காம் இயலாகிய குமுகாய நோக்கில், இன்றைய அவல நிலைகள் விரிவாகச் சுட்டப் பெறுகின்றன. குமுகாய இழிவுகளைப் போக்கவும், அவலங்களை நீக்கவும், உரிமைகளைக் காக்கவும், இன மான உணர்வுகளை மீட்கவும் இவ் விருவரின் பாடல்களும் எங்கனம் தூண்டு கோல்களாக விளங்குகின்றன என்பதை இவ் வியல் தெளிவுபடுத்துகின்றது.

'காப்பியங்கள், என இக்காலத்தே அழைக்கப் பெறும் இருவரின் கதை நெடும் பாடல்களும் விடுதலையை வலியுறுத்துகின்றன. பாவேந்தரின் பாடல்களில் நாட்டு விடுதலை உணர்வும், பெருஞ்சித்திரனாரின் பாடல்களில் குமுகாய விடுதலை உணர்வும் மேலோங்கியுள்ளன. கதைக்கரு, கதை, கதைக் கோப்பு பாத்திரப் படைப்பு வாழ்வியல் கருத்துகள், பாவகை, மதிப்பீடு ஆகியன இருவரின் கதைப் பாடல்களிலும் தனித்தனியாக எடுத்துரைக்கப் பெற்றுள்ளன. பெருஞ்சித்திரனாரைக் காட்டிலும் பாவேந்தர் முதன்மையான இடத்தைக் கதைப் பாடல்களுக்கு வழங்கி மிகுதியான அளவில் பாடிக் குவித்துள்ளார்.

உணர்ச்சி நடை, எழுச்சி நடை, பெருமித நடை, அழகு நடை, அருவிநடை முதலியன இருவரின் பாடல்களிலும் எதிரொலிக்கின்றன என்பது சொல்லாட்சியும் நடையும் என்ற ஆறும் இயலில் விளக்கப் பெற்றுள்ளது. பாரதிதாசன் நடையில் எளிமையும் இயல்பும் மிகுதி. பெருஞ்சித்திரனார் நடையில் புதுச்சொல் புனைவும், பழஞ் சொற்களைப் புதுக்கிக் காட்டலும் மிகுதி. சங்க இலக்கிய ஈடுபாட்டுத் தன்மையை இருவரும் தத்தம் பாடல்களில் வெளிப் படுத்துகின்றனர்.

முடிவுரை என்னும் இறுதி இயலில் இயல் முடிவுகள் தொகுத்துக் கூறப்பெற்றுள்ளன. பாரதி வட்டம், பாரதிதாசன் பரம்பரை, பழம்புலவர்கள் வட்டம் என்ற மூன்று சூழல் வட்டங்களைத் தாண்டிப் பெருஞ்சித்திரனார் வட்டம் நான்காவது சூழல் வட்டமாக வீறு நடை கொண்டு வருகிறது என்பதும், தமிழ்ப் பாவலர்களிடையே இருவரும் தனித் தன்மையுடன் விளங்குகின்றனர் என்பதும் தக்க சான்றுகளால் நிறுவப்பெற்றுள்ளன.

ஆய்வேட்டில் பின்னிணைப்புகள் என்னும் பகுதியில் ஆய்வில் இடம் பெற்ற நூற்றொகைப் பட்டியல், இருவரின் கவிதை நூல்களின் கால நிரல்—நூல் நிரல்; அட்டவணைகள், நேருரைகள் ஆகியன இடம் பெற்று ஆய்வுக்குப் பெரிதும் அரண் சேர்க்கின்றன.

தமிழினம் உயர்ந்து விளங்கவும், தமிழர்களிடையே நிலவும் இல்லாமை, கல்லாமை ஆகிய இழிவுகள் துடைத்தெறியப் படவும், இருவரின் பாடல்களும் போர் முரசங்களாக ஆர்க்கின்றன. வாழ்ந்தவரைக் காட்டிலும் வாழும் பாவலரைப் பற்றிய மதிப்பீடுகள் சற்றுக் கடுமையாக நிலவும் போக்கினைக் குமுகாயத்தில் காணமுடிகின்றது. பாவேந்தர் 1926-இல் மயிலம் சுப்பிரமணியர் துதியமுது பாடி ஆத்திகராயும், 'ஓர் கடவுள் உண்டென்போம், உருவணக்கம் ஒப்போம்' என்றுபாடி ஓரிறைக் கொள்கையினராயும், 'சாணிக்குப் பொட்டிட்டு' போன்ற பாடல்களின் வாயிலாகக் கடவுள் மறுப்பாளராயும் விளங்கித் தம் முத்திறப் போக்கினை வெளிப்படுத்துகின்றனர். பெருஞ்சித்திரனார் ஓரிறைக் கொள்கையில் நம்பிக்கை கொண்டவர் எனினும் கடவுளின் பெயரால் நிலைத்த மூட நம்பிக்கைகளைச் சாடுவதில் முனைப்புடன் விளங்குகின்றார். பெரியாரிடத்தில் மிகுந்த பற்றும், அவரது கொள்கையில் அழுத்தமான பிடிப்பும் உடையவராகப் பெருஞ்சித்திரனாரைக் காண முடிகின்றது; தமிழ் நாட்டு விடுதலைக்குத் தயங்காமல் குரல் கொடுக்கின்ற ஆண்மையாளராகப் பெருஞ்சித்திரனார் விளங்குகின்றார்.

இவ் வாய்வின் மூலம் மேலும் பல ஆய்வுகளுக்கு எதிர்காலத்தில் வழியுண்டு என்பதும் இவ் வாய்வேட்டில் நிறுவப் பெற்றுள்ளது. தம் படைப்புகளை ஒப்பிட்டு ஆய்வு மேற்கொள்ளத் தம் இசைவினை வழங்கி ஊக்குவித்த பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கட்கும், ஆய்வு நெறியாளர், புற நிலைத் தேர்வாளர் ஆகியோர்க்கும் என் உளங்கனிந்த நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். அறிஞர்களின் ஐயப்பாடுகளை, கருத்து விளக்கங்களை அவாவி அமைகின்றேன்.

(பின்னர் வினா—விடை நிகழ்ச்சி நெடுநேரம் நடைபெற்றது.)

இறுதிச் செய்தி!

குளித்தலை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் துணைத் தலைமையாசிரியராகப் பணியாற்றி வரும் பாவலர் கடலூர் மணிமாறன் அவர்கட்கு 'பாரதிதாசன்—பெருஞ்சித்திரனார்—ஓர்

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

செய்திகள்

1. உ.த.மு.க. பெரியார் மாவட்ட, 2-ஆவது மாவட்ட மாநாடு —பாவேந்தர் நூற்றாண்டு விழா:

கடந்த கும்பம் 5-ஆம் பக்கல் (17-2-91) ஞாயிறு அன்று, ஈரோட்டில், உ.த.மு.க. பெரியார் மாவட்ட 2-ஆவது மாவட்ட மாநாடும், பாவேந்தர் நூற்றாண்டு விழா நிறைவு விழாவும் ஈரோடு பேருந்து நிலையம் அருகில் உள்ள அசந்தா உணவக வளாக அரங்கில் நடைபெற்றன.

அன்று காலை 10 மணியளவில், பாவேந்தர் நூற்றாண்டு விழாப் பாவலர் அரங்கம், பாச்செம்மல் அரு.கோபாலன் தலைமையில் நடைபெற்றது. 'வல்லாண்மையால் அழிவுறும் தமிழினம்' என்னும் பொதுத் தலைப்பின் கீழ், பாவலர்கள் செந்தமிழ்ச் செல்வன், ஆ. அரங்கநாதன், கொ. செ. சின்னப்பனார், தமிழ்க்குமரன் ஆகியோர் முறையே சாதி, மொழி, இனம், மதம் என்பன வற்றில் ஏற்பட்ட வல்லாண்மைகள் பற்றிப் பாடினர்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஒப்பாய்வு' என்னும் தலைப்பிலான ஆய்வுக்காகத் திருச்சி பாரதி தாசன் பல்கலைக் கழகம் முனைவர் பட்டம் வழங்கியுள்ளது.

பாவலர் கடலூர் மணிமாறன் அவர்கள் எதிர்நீச்சல், விடியல் விதைகள், சிவப்பு மலர்கள், சங்கே முழங்கு, மணக்கும் மலேசியா, அறிவுரைக் கதைகள் முதலிய பதினைந்துக்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

தமிழ் நாட்டுப் பாடநூல் குழு உறுப்பினராக இருந்து நான்காம் வகுப்பு, ஐந்தாம் வகுப்புத் தமிழ்ப் பாடநூல்களை உருவாக்கினார். இரண்டாம் வகுப்புத் தமிழ்ப் பாடநூலிலும் பத்தாம் வகுப்புத் தமிழ்ப் பாடநூலிலும் இவரின் பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

'கவிமாமணி' விருது பெற்றுள்ள இவர், 1987-ஆம் ஆண்டு மலேசியாவில் நடைபெற்ற ஆறாவது உலகத் தமிழ் மாநாட்டில் பேராளராகப் பங்குப் பெற்றார். பல்வேறு ஆய்வரங்குகளில் ஆய்வுக் கட்டுரைகள் படைத்து வருகிறார்.

கிருட்டிணராயபுரம் திருக்குறள் கழகச் செயலராகவும், கரூர்த் தமிழ்ச் சங்கத்தின் இணைச் செயலராகவும், தமிழ் நாடு எழுத்தாளர் உறவின் மண்டலச் செயலராகவும் பணியாற்றி வருகிறார். தனித் தமிழ் ஆர்வலராகிய இவர் பாவாணர், பாவேந்தர், பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆகியோரின் இலக்கிய அடிச் சுவட்டைப் பின்பற்றி இனிய உலா நடத்தி வருகிறார். ○

பின்னர் நடந்த இளையோர், மகளிர் அரங்கத்தில் செல்வி முத்துவள்ளியம்மை, 'கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே' என்னும் தலைப்பிலும், உ.த.மு.க. துணைப் பொதுச் செயலர், பறம்பை அறிவன் 'தமிழில் நலமும் வளமும்' என்னும் தலைப்பிலும், சொல்லாய்வறிஞர் ப.அருளி 'தமிழ் வழிக் கல்வி' என்னும் தலைப்பிலும் சொற் பொழிவாற்றினர்.

அடுத்தபடி மாலை 5 மணியளவில் நடந்த பாராட்டு அரங்கத் திருகு, தன்மான அரிமா. தி.மு.அரசமாணிக்கம் (அமைப்பாளர் உ.த.மு.க. பெரியார் மாவட்டம்) அவர்கள் தலைமையில், கல்வெட்டியல் அறிஞர், பேரா. முனைவர். கா.அரங்கச் செல்வனார், பாட்டுத் தென்றல், புலவர் வா.பொதிகைச் செல்வனார், திருக்குறள் நினைவேந்தல் கலியனூர் கந்தசாமி அய்யர் ஆகிய மூவர்க்கும், குறள் நெறிச் செல்வர் செ. ந.குப்புமுத்து அயயா அவர்கள் பொன்னாடை போர்த்திப் பாராட்டுத் தெரிவித்தார்கள். அத்துடன் திருக்குறட் செல்வர் தி.அ.சண்முக சுந்தரம் அவர்களும் பாராட்டுரை வழங்கினார்கள்.

இறுதியில் மாலை 6-30 மணியளவில் அறிஞர் அரங்கம் நடைபெற்றது. அதற்குப் புலவர். தி மு.அரசமாணிக்கனார் தலைமையேற்றார். தொடக்கவுரையை மயிலாடுதுறை வழக்கறிஞரும், தமிழின விடுதலைக் கழக நெறியாளரும் ஆகிய தி.இராமதாசு அவர்கள் ஆற்றினார்.

இறுதியாக, பாவலரேறு பெருஞ்சித்திரனார் (முதல்வர்: உ.த.மு.க.) அவர்கள் விழா நிறைவுப் பேருரை நிகழ்த்தினார்கள். (ஏறத்தாழ 2 மணி நேரம் நிகழ்ந்த இச் சிறப்புரைதான் அண்மையில், சென்னை, நிறைமொழி அச்சகத்தாரால் 'ஓ! ஓ! தமிழர்களே!' என்னும் தலைப்பில் நூலாக வந்துள்ளது.) அதையடுத்து திருப்பூர் க.தமிழப்பன் அவர்களின் நன்றியுரையுடன் விழா நிகழ்ச்சி நிறைவுற்றது.

2. கோபி கலைக் கல்லூரி, கோபிசெட்டிபாளையம் — மாணவர் பேரவை, தமிழ்ப் பேரவை-சிறப்புக் கூட்டம்.

சென்ற 18-2-91 திங்கட் கிழமை, மாலை 4 மணி அளவில், கோபிசெட்டிபாளையத்தில் உள்ள, கோபி கலைக் கல்லூரியில், மாணவர் பேரவை, தமிழ்ப் பேரவை சிறப்புக் கூட்ட நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு, கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவரும், பொறுப்பு முதல்வரும் ஆகிய பேராசிரியர், முனைவர். திரு. கா.அரங்கச் செல்வனார் தலைமையேற்றார். முன்னாள் தமிழ்ப் பேரவைத் தலைவர் திரு. கா.பரிமளம் வரவேற்புரை யாற்றினார். பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் சிறப்புப் பேருரை யாற்றினார். தமிழ்ப் பேரவைத் தலைவர் திரு. காசிம் அலி நன்றியுரையுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

3. பாண்டியன்—இராசேசுவரி வாழ்க!

சென்னை, கோட்டூர்புரத்தைச் சார்ந்த, தமிழக, தமிழீழக்

கொள்கைப் பாடகர் தேனிசை செல்லப்பா—செ.விசயா இணையரின் அன்பு மகள் செல்வி செ.இராசேசுவரிக்கும், செல்வன் மு.வெ.சா.பாண்டியனுக்கும், கடந்த மீனம் திங்கள் 11 (25-3-91) ஆம் நாள், தென்காசி மாவட்டம், துவரங்காட்டில் நடைபெற்ற திருமணத்தை யொட்டி, சென்ற 3-4-91 அறிவன்கிழமை, சென்னை, இராயப்பேட்டை, திரு.வி.க. மணி மண்டபத்தில் மாலை 6 மணியளவில் வரவேற்பு விழா, தமிழ்த்திரு. பா.இராமச்சந்திர ஆதித்தனார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு.தேனிசை செல்லப்பா அவர்கள் வரவேற்புரைக்குப் பின், தலைவர் மணமக்களை வாழ்த்தி நல்லுரை வழங்கினார்கள். அடுத்து பேராசிரியை மு.சாலினி இளந்திரையன் அவர்களும், பேராசிரியர் சாலை இளந்திரையன் அவர்களும், மணமக்களை வாழ்த்தியும், இல்லறவியல் சிறப்புகள் பற்றியும் கருத்துரை வழங்கினர். இறுதியாக, பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் ஏறத்தாழ ஒன்றரை மணி நேரம், தமிழர் வாழ்வியல் இனமானவுரை நிகழ்த்தினார். நிகழ்ச்சியில் முடிவாக தேனிசை செல்லப்பா அவர்கள் நன்றியுரையும், விருந்தளிப்பும் நடைபெற்றன.

4. தமிழர் தேசிய இயக்க 3-ஆவது மாநில மாநாடு-தஞ்சை:

கடந்த 20-4-91 காரி காலை 10 மணியளவில் தஞ்சை, இராமநாதன் அரங்கில், சென்ற, 9-6-90 அன்று தடை செய்யப் பெற்று, 90 பேர், 17 நாள்கள் சிறைவைக்கப் பெற்று, இன்னும் வழக்கில் உள்ள, தமிழர் தேசியத் தன்னுரிமை மாநாடும், இயக்கத்தின் 3-ஆவது மாநில மாநாடும், பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டின் விழாவும் இணைந்து கொண்டாடப் பெற்றன.

காலை நடந்த பாவேந்தர் நூற்றாண்டு நிறைவு விழாவிற்கு இசையறிஞர் திரு. தண்டபாணி அவர்கள் தலைமை தாங்கினார். இயக்கத்தின் மாநில, மாவட்டப் பொறுப்பாளர்கள் பலரும் உரையாற்றி முடிந்தவுடன், பாவலரேறு பெருஞ்சித்திரனார் சிறப்புரையாற்றினார்.

மாலை நடந்த தமிழர் தேசிய இயக்கத்தின் 3-ஆவது மாநாட்டில், திருவாளர்கள் பெ.மணியரசன், புலவர். கலியபெருமாள், பி.எசு.மணி, பொழிலன், பழனித்துரை, மருத்துவர். மித்ரா, சீனிவாசராவ் முதலியோர் கருத்துரைக்குப் பின், இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் சிறப்புரையாற்றினார். தமிழ்த் தேசியத் தன்னுரிமை உறுதி மொழியை அவர் முன்மொழிய, மாநாட்டுப் பார்வையாளர்கள் ஒரே குரலுடன் வழிமொழிந்தனர். இறுதியில் திரு.அ.வியனரசு நன்றி கூற, இரவு 10 மணியளவில் மாநாடு இனிதே நிறைவுற்றது.

5. குறிஞ்சிக் குமரன்—நன்மதி வாழ்க:

சென்ற தி.பி. 2022, விடை (வைகாசி)த் திங்கள் 5-ஆம் பக்கல் (19-5-91) ஞாயிறு அன்று காலை 8 மணியளவில், துறையூர், வி.வி.ஆர்.திருமண மண்டபத்தில், தீவிரத் தென்மொழி அன்ப-

ரும் ஒப்வு பெற்ற ஆசிரியரும் ஆகிய திரு.மு.தமிழ் நெஞ்சன்—தாமரை (பத்மாவதி) இணையரின் மகன் செல்வன் குறிஞ்சிக் குமரனுக்கும், ஈரோடு, கருங்கல் பாளையம் திருவாளர் வே,தெய்வ சிகாமணி—கண்ணம்மாள் இணையரின் மகள் செல்வி சுமதி என்கிற நன்மதிக்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில் தமிழ்த் திருமணம் இனிதே நடைபெற்றது. தொடக்கத்திலும் இறுதியிலும், திரு. மு.தமிழ்நெஞ்சன் வரவேற்புரையும் நன்றியும் கூறினார்.

6. பாவேந்தர் நூற்றாண்டு—நிறைவு விழா:

மதுரை, கோரிப்பாளையம், ஏ.ஏ.எசு. திருக்கண் மண்டபத்தில், கடந்த 21-7 91 ஞாயிறு காலை 10 மணியளவில், மதுரை, புரட்சிக் கவிஞர் பேரவை சார்பாக, பாவேந்தர் நூற்றாண்டு—நிறைவு விழா இனிதே தொடங்கியது.

தொடக்கத்தில் உவமைப் பாவலர் சுரதா தலைமையில் நடந்த பாட்டரங்கத்தில், பாவலர்கள் அரவரசன், இளையவன், ஈகன் (தியாகு), இருளப்பன் ஆகியோர் முறையே பாவேந்தர் பார்வையில் மொழியுணர்வு, பகுத்தறிவு, பொதுவுடைமை, பெண்ணுரிமை ஆகிய தலைப்புகளில் பாடினர்.

அதன் பின்னர் நடந்த கருத்தரங்கத்திற்கு திரு.'அனல்' மு.அறிவு மகிழ்நன் (விவேகானந்தன்) தலைமையேற்றார். திரு.அ.வெற்றிச் செல்வன் வரவேற்புரை நிகழ்த்தினார். முனைவர் சேதுமணி மணியன், 'புதியதோர் உலகம் செய்வோம்' என்னும் தலைப்பில் உரையாற்றினார். இறுதியில் 'பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால்' என்னும் தலைப்பில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் நீண்டதொரு சிறப்புரையாற்றினார். திரு.கற்பூரம் நாகராசன் நன்றியுரையுடன் நிகழ்ச்சி இனிது நிறைவுற்றது. ○

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின்

ஓ! ஓ! தமிழர்களே!

கடந்த 17-2-91-இல் ஈரோட்டில் நடந்த உ.த.மு.க. இரண்டாவது மாநாட்டில் ஆசிரியர் செய்த அரிய சிறப்புச் சொற்பொழிவு நூல்!

வெள்ளைத் தாள் பதிப்பு : 9-00

செய்தியச்சுத் தாள் பதிப்பு: 6-50

இஃது ஒரு புதிய வெளியீடு. பதிவுக்கொடுப்பு அஞ்சல்செலவு: 3-00

தென்மொழி, சென்னை-5.

ஞலும், எழுதினுலும், கருத்துக் கூற விளக்க முற்பட்டாலும், அப்பப்பா—இது என்ன நாடா—காடா? அடி, உதை,சிறை—இதுவே தமிழின உணர்வாளர்களுக்குப் பரிசு!

சட்டம், ஒழுங்கு என்றெண்ணி அடக்கு முறையைக் கையெடுத்துக் கொண்ட ஆட்சி பின்னர் மக்களின் அடக்கு முறையால் கீழே விழ நெடுநாளாகாது. அன்புடன் தங்களின்

—குழந்தை ஈகவரசன், திருச்சி-16

Q: 1469: அன்புகெழீஇய ஐயா அவர்களுக்கு,

ஆள்கின்ற ஆரியக் கூட்டம் தங்களைச், சிறைப் படுத்தியதில் நான் அதிர்ச்சி அடையவில்லை. வரிக்கு வரி கிளர்ச்சியூட்டும் தங்களின் கட்டுரைகளைப் படித்த பிறகு அவர் வாளா விருப்பாரோ? 'கடவுள் இல்லை, இல்லவே இல்லை' என்று கழகத்தினர் கதறிய போது, ஆரியர் அதைக் கண்டு கொள்ளவில்லை. நாய்கள், குரைக்கட்டும் என்று புறக்கணிப்புச் செய்தனர். 'உழுவோர்க்கே நிலம்' என்று பொதுவர்கள் உலாவரும்போதும் ஆரிய முதலாளிய அரசு கண்டு கொள்ளவில்லை. நரிகள் ஊளையிடட்டும் என்று விட்டு விட்டனர். ஆனால் தமிழர்க்குத் தனிநாடு ஏன் வேண்டும் என்று காரணிகளை பட்டியல் போட்டு நீங்கள் காட்டியதும் மிரள்கின்றனர்; ஆரியரின் ஆணிவேர் பட்டுப் போகும் கதை இதில் மட்டுமே அடங்கியிருக்கிறது என்பதை அவள் அறிந்து வைத்திருக்கிறாள்; உடனே புறப்பட்டுவந்து உங்களைத் தளையிட்டு விட்டாள். புலிகளை அவமானப் படுத்தாதே என்று ஊர்வலம் வருவோரை கொடுஞ் சிறையில் மாட்டிவைத்து மனம் மகிழ்கின்றாள்; எனவே தொடர்ந்து தமிழ் நிலத்திலும், தென்மொழியிலும், இந்திய தேசியத்தையும்,இராசீவின் குடும்ப 'இச'த்தையும் தோலுரித்துக் காட்டும் உங்களைச் சும்மா விடுவாளோ?

ஆரியச் செல்வி, பரபரப்பாகச் செயலில் இறங்கி விட்டார்; காஞ்சிபுரத்திலே விழா; சங்கரனின் 98 நிறைவு. துணைக்குடிக்கோ சங்கர்தயாள் சர்மா முன்னிலையாம்! ஞாயமற்ற தலைமை நடுவர் நூல் வெளியீட்டாளராம்; அடடா...தமிழ் மண்ணிலே ஆதி சங்கரன் ஆங்கில நூல் வெளியீட்டு விழா...தமிழ்நாடு ஆரியத்தின் வேட்டைக்காடு; போதாக்குறைக்கு அவாளின் தலைமை வேறு; கேட்கவா வேண்டும்? நயன்மைக் கட்சியினரின் இந்து அறநிலையக் சட்டத்திற்குக் கல்லறை...அந்தக் கல்லறையை உடைத்தெறிய அதன் பக்கத்தில் 'இந்து பாதுகாப்பு வாரியம்' என்ற கருவேல மரக் கன்றுகள் நடுவை, 'அது இந்து ஆலயப்பாதுகாப்பு வாரியமா?' இல்லை. இல்லவே இல்லை. 'அனைத்து இந்திய ஐயர், ஐயங்-கார் 'சம்ரட்சணை' 'சங்'! நர்சரி பள்ளிகளில் தமிழ் வளர்ப்பு! 'கச்சேரி'யை முடுக்கி விட்டபடியே வேத சமற்கிருத கல்லூரி-களின் திறப்பு விழாக்கள்...பச்சோந்தித்தனம் என்பதா? பார்ப்-னீய நரித்தனம் என்பதா?

எனவே இந்த நிலைகளை திருச்செந்தூர் பகுதிகளில் விளக்கிட வேண்டி தோழர் முருகேசன் (இளவேனில் ஒளிப்பேழையகம், திருச்செந்தூர் தமிழோசை ஒளிப்பேழையகம்; சாத்தன்குளம்) திருச்செந்தூர், பரமன்குறிச்சி, சாத்தன்குளம், குரும்பூர்—ஆகிய இடங்களில் கூட்டம் நடத்த விரும்புகிறார். எனவே வெளியூர்-களில் பேசுவதற்காக நான்கு நாட்கள் எமக்காக ஒதுக்கித் தாருங்கள்;

வாய்ப்பு இருக்குமானால் தம்பி பொழிலையும் உடன் அழைத்து வாருங்கள். திருச்செந்தூர் பகுதிகளில் சுவர் எழுத்து பரிப்பு (பிரச்சாரம்) ("நயன்னிலன்" என்பது சொல்லும் பயனில பாரிந்துரைக்கும் உரை") செய்ய விரும்புகிறோம்; அதற்கு ஏற்ற

சில முழக்க வரிகளைத் தங்களின் பார்வைக்கு வைத்துள்ளேன், அவற்றைச் சரி செய்து எழுதுங்கள். அன்பின்

—வே. தமிழ்மாறன், அம்மன்புரம்.

ஓ: 1470: பேரன்பின் ஐயா அவர்களுக்கு வணக்கம். தமிழ் உணர்வாளர்களும் ஈழப் போராளிகளும் வரம்பு கடந்து துயரில் மூழ்க வைக்கப்படும் இக் கொடிய வேளையில் தமிழினத் தலைவர்கள் என்பார் வாயையும்...யும் பொத்திக் கொண்டு கிடக்கும் இழிவான நாளிலே—திரு.ம.கோ.இரா. இறந்த போதும், திரு. இராசீவ் காந்தி சிதைக்கப் பட்ட போதும், அண்மைத் தேர்தலில் வென்ற அ.தி.மு.க. தலைவர்களைத் திறனாய்வு செய்த போதும், தாங்கள் எழுதிய உரைகள், பாடல்கள் தங்கள் பேராண்மையையும் உயிர் மானத்தையும் சேர்த்துத் தாங்கள் யார் என்பதைத் தெளிவாகக் காட்டும் தமிழக வரலாற்றுப் பொன்னேட்டின் பக்கங்களாக விளங்குகின்றன.

தமிழ்நிலம், தென்மொழி இதழ்கள் என் நெஞ்சம் சுழலும் எண்ணங்களுடன் ஒன்றிக் கலந்து ஆறுதல் தருகின்றன.

தங்கள் அன்புள்ள, —த. அன்பழகன், இருவப்ப புரம்.

ஓ: 1471: தண்ணொளியே! வணக்கம். தென்மொழி சுவடி:24 ஓலை: 3ஐக் கண்டேன். தங்களின் உள்ளம் 'நின்னுடல் வெடித்துச் சுக்குநூறாகச் சிதறுக' என்ற பாடல்வரிகள் இயற்கை அன்னையின் இனத் தமிழ் அன்னையின் உள்ளக்குமுறல்கள்! நெஞ்சத்துடிப்புகள்! இன்பத் தமிழீழம் கண்டிட இன்னுயிர் இழந்த பச்சிளந்தமிழ் நெஞ்சங்களின் சார்பில் கோடிக்கணக்கானத் தமிழர்களின் சார்பில், என் நெஞ்சுகனிந்த நன்றியைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்களை எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் உள்ளத்தில், ஒருவகை அன்பு துளிர்க்கிறது! அறிவு பிறக்கிறது! அமைதி மணக்கிறது! கனியைக்கண்டிடும் கிளி போன்று, காலையைக் கண்டிடும் பாவலனைப் போன்று, தாயைக்காணும் மழலைபோன்று, உண்மையில், தங்கள் பெயர் பொருத்தமானது! பொருள் பொதிந்தது! மன்னிக்கவும்; (துரை மாணிக்கம்) மாந்தருள் மாணிக்கம்தான்! அன்புப் பெற்றோர்களை எண்ணி நான் பூரிப்புக் கொள்கிறேன்! தலை வணங்கச் செய்கிறேன்.

தங்களைப் பார்ப்பவர்கள் பேறுபெற்றவர்கள்! தங்களிடம் பணிபுரிபவர்கள் உண்மையில் கோடி கோடி புண்ணியம் (பேறு) செய்தவர்கள்! வறுமை இருக்கலாம்; இறக்கும் வரை இருக்கும்! ஆனால் மணக்கும் "உரை மகள்" உள்ளக் கூந்தலில் சூடிக்கொள்ளும் பேறு யாருக்குக் கிடைக்கும்? காணக்கண்கோடி வேண்டும்! தங்களைப் போன்ற மாணிக்கங்கள் பிறப்பு அரிது! அரிது! என்றும் வாழி வாழி!

ஒண்சுடரே! இம்முறை நான் வந்த பொழுது கேட்டது குறைவு; கண்டது ஏராளம்! எண்ணியது பல்லாயிரம்! எறும்பும் ஓய்வு பெறும்; காற்றும் தன் வேகத்தைக் குறைத்துக் கொள்ளும்; அலை கூட சற்றே அமைதி காணும்; தங்களின் உழைப்பு எல்லாவற்றையும் மிஞ்சிற்று! தங்களின் தொண்டினை எண்ணிக் கொண்டே உள்ளம் களியுறுகிறேன்! கடமையை ஆற்றுகிறேன்! நீங்கள் சொன்னதைச் செய்பவன். அன்புள்ள

—அருள்மணி, வெங்காலூர்-51

Scanned with CamScanner